தென்மொழி

அழகிப் போட்டியைத் தடைசெய்க

பெண்ணை விளம்பரத்துக்
கான பெரும்பொருளாய்
வண்ணமுறக் கண்டு
வரிசையில் - எண்ணுகின்ற
போட்டியை விட்டொழிக்க
வேண்டும் விடுகிலரேல்
ஒட்டி விடப்படுவர் ஊங்கு!

ஆடை அணிகடந்து
பெண்ணின் உடலழகை
மேடையிற் கண்டளத்தல்
போட்டியா ? - காடையர்தம்
புன்செயலை விட்டொழித்துப்
போய்விடுக போகாரேல்
வன்செயலைத் தூண்டும் வலிந்து!

சந்தையை நாடும்
சழக்கர்கள் பெண்ணழகைச்
சந்தைப் பொருளாகச்
சாற்றுகிறார் - அந்தோ
நிலைகெட்டுப் போகாமல்
காக்க அரசு
தலையிட்டுச் செய்க தடை!

- இறை

உள்ளே...

ஆங்கில வழிப் பள்ளிகள் மீது அக்கறை ஏன் ?

தமிழை அழித்துவிட்டுத் தமிழனை வாழ வைக்க முடியுமா ?

சிற்றூர்ப் புறக்கலைகளின் மறுமலர்ச்சியும் - உயிரூட்டலும்

மக்களவை

அண்டைத் தமிழர் அயலவரா ? - பாடல்

வடமொழி எழுத்துகள்

செய்திகள்

மற்றும் பிற...

தூய தமிழ் இலக்கியத் திங்களிதழ்

சுவடி - 28
ஓலை - 11
விலை உரு. 4.00

திபி. 2027 நளி - 1996 நவம்பர்

தமிழல்லால் தமிழரில்லை

'தமிழல்லால் தமிழரில்லை' என்று நாம் ஒவ்வொருவரும் உணரும் நாள் எப்போது? தமிழே நமக்கு வித்தாக, தமிழினமே நமக்குச்சொத்தாக, நாம் நமக்குற்ற நம் தமிழ்நிலத்தை ஆளுமை செய்வது எப்போது? எத்தனை இளைஞர்கள் இன்று இவ்வுண்மை நிலைகளை உணர்ந்திருக்கின்றனர்? நாற்றமடிக்கும் அரசியல் சகதியுள் தம்மை நலிவு செய்து கொண்டுள்ள - நமக்கென வாய்த்த கொள்ளைப் பெருந்தலைவர்களின் கையடிக்கும் வாயடிக்கும் தம்மை 'ஆளாக்கிக் கொண்டு அறிவிழக்கும் தமிழரிடை, உண்மைத் தமிழ் ஆற்றலையும், உலகத் தமிழர் வாழ்வுகளையும் ஈடேற்றும் பெரு முயற்சியில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளும் உள்ளூரன் மிக்க உளவூக்கம் குன்றாத - உண்மைத் தமிழ் நெஞ்சங்களை நாம் ஒன்றிணைக்க வேண்டும். அவர்தம் உடல்நரம்புகளில் செந்தமிழ்க் குருதியைப் பாய்ச்சுதல் வேண்டும். மரத்துப்போய்க் கிடக்கும் அவர்தம் நல்லுணர்வுகளில் தூய்தமிழ்க் கனப்பை மூட்டுதல் வேண்டும்.; தொய்ந்து கிடக்கும் அவர்தம் நெஞ்சங்களின் காற்றுப் பைகளில், பண்டைப் பசுந்தமிழின் நறுங்காற்றை ஓடவிட வேண்டும். மொத்தத்தில் அவர்தம் காட்சிகளை மாற்றல் வேண்டும்; கருத்துகளைப் புதுக்கல் வேண்டும். அவ்விடத்துச் செந்தமிழின மாட்சிகளை வேரூன்றச் செய்தல் வேண்டும். போலி நாகரிகத்தாலும் புன்மைச் செயல்களாலும் அழுந்திக் கிடக்கும் அவர்தம் தோள்களை விடுவித்தல் வேண்டும். துளியும் சோர்ந்துபோகாமல் ஒருபெரும் வலிந்த முயற்சியில் இவ்வெற்றிகளைக் குவித்தல் வேண்டும்.

தமிழே இவ் வெற்றிக் களத்தின் வெல்கருவி. தமிழே இவ்வரு முயற்சியின் வழித்துணை. தமிழே இவ் வருமைப்பாட்டின் வழிநடைப்பண். மற்றபடி, அரசியலென்றும் பொருளியல் என்றும், சாதி என்றும் சமயம் என்றும் கூக்குரலிடும் வலிமையற்ற ஓலங்களால் வந்து வாய்க்கப்போவது ஒன்றுமில்லை. தமிழை விடுத்துத் தமிழர்களை ஒன்றிணைக்க முடியாது. தமிழை மறந்து தமிழ் நாட்டை வளமுறச் செய்தல் இயலாது. தமிழைத் தாழ்த்தித் தமிழ்ப் பண்பாட்டைச் சமைத்தல் ஒல்லாது. தமிழைத் தவிர்த்துத் தமிழினத்திற்கு நலந்தேடிவிடல் நடவாது! பல்வேறு முயற்சிகளும் பல்வேறு வகையான விடிவுக்குப் பயன்படலாம். ஆனால், தமிழியல் மரபுகளே தமிழினத்தைக் கட்டிக் காக்க வல்லன. இவ்வுலகின்கண் வெளிப்பாடுற்ற ஒவ்வோர் உயிரினத்தின் முழு மலர்ச்சியும், அதனதன் உள்ளுயிர்க் கூறுகளை மலர்த்திக் கொள்வதில்தான் நிலைப்பாடுற்றுச் சிறந்தியங்கக் கூடும். உள்ளுயிர்க் கூறுகள் சிதைக்கப்பெறும் எந்த ஓர் உயிரினமும் இந் நீணிலத்தில் நெடுங்காலம் நின்று வாழ்ந்ததில்லை. இஃது ஓர் உயிரின வரலாற்றுண்மை. இவ்வடிப்படை உண்மை எத்துணை அறிவியல், வாழ்வியல் வளர்ச்சி மாற்றங்களாலும் சிதைக்கப்பெறல் முடியாது. சிதைக்கச் சிதைக்கச் செழித்து வளரும் தகையது இது.

பாவலரேறு - தென்மொழி சு:16 - ஓ:5 (1980)

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

(நிறுவனம் தி.பி.1990 (1959)

நிறுவனர் : பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தென்மொழி

மொழி—இனம்—நாடு

நம்மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களைவிட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடையமுடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே தமிழக விடுதலைதான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

ஆசிரியர் : தாமரை பெருஞ்சித்திரனார்

சுவடி : 28) தி.பி.202எ - நளி (நவம்பர் - '96) (ஓலை - 11

ஆங்கில வழிப் பள்ளிகள்மீது அக்கறை ஏன்?

நயன்மைக் கட்சிக்காரர்கள் ஆரியப்பார்ப்பனிய எதிர்ப்பை முன்னெடுத்தாலும் ஆங்கிலத்தில் கடும்பற்றுக் கொண்டவர்களாகவும் இருந்தனர். இன்று ஆங்கிலேயர்களின் ஆட்சி இங்கில்லை யென்றாலும் ஆங்கிலத்தைப் பொறுத்தவரை நயன்மைக் கட்சியினர் கொண்டிருந்த மனப்பான்மை இன்றளவும் இங்குள்ளவர்களிடையே விட்ட குறை தொட்டகுறையாக ஒட்டிக் கிடக்கின்றது. அதன் வெளிப்பாடுதான் தமிழகச் சட்டப் பேரவைத் தலைவரின் பதின்மநிலைப் (Matriculation) பள்ளிகளுக்காகப் பரிந்து பேசுவது.

தமிழ்நாட்டில் ஆங்கிலவழிப் பதின்ம நிலைப் பள்ளிகள் தழைத்துச் செழித்து அங்கிங்கெனாதபடி எங்கணும் அடர்ந்து நிற்கின்றன. மக்களின் தாய் மொழியாகிய தமிழைப் புறக்கணித்தும் அவமதித்தும் தப்பித் தவறி சிறுவர்கள் தமிழ் பேசினாலும் தண்டித்தும் செய்யும் அழிம்புகளுக்கு அளவே இல்லை. இது வெளிப்படை இந் நிலையை எதிர்த்துத் தமிழ் நல - பொது நல அமைப்புகள் தொடர்ந்து போர்க்குரல் எழுப்பி வந்திருக்கின்றன.

இனி தி.மு.கழக அரசு தமிழ்க்கெனத் தனித்துறை அமைத்து தமிழ்நலப் பணிகளை முனைப்பாகச் செய்ய முன்வரும் நிலையில் தமிழகச் சட்டப் பேரவைத் தலைவர் பழனிவேல் இராசன் அவர்கள் ஆங்கிலவழிப் பதின்மநிலை பள்ளிகளுக்காகப் பரிந்து பேசியிருப்பது கண்டனத்துக்குரியது.

'ஆங்கிலவழிப் பதின்மநிலை பள்ளிகள் இங்கே நிலை பெற்றுவிட்டன. இவற்றை ஒழித்துக் கட்டிவிட வேண்டும் என்று பேசுவது சிறுபிள்ளைத்தனமானது' என்றும், 'ஆங்கில வழிப் பள்ளிகளில் பயில்வது தாய்மொழியை அவமதிக்கும் செயலென்று கருதப் படக்கூடாது' என்றும், 'ஆங்கிலமே இணைப்புமொழியாக இருக்க வேண்டும் என்று வெளிப்படையாகக் கோர்ிக்கை வைத்தவர்கள் நாம்' என்றும், 'மும்மொழித் திட்டம் நடைமுறையில் இல்லாதது தமிழ்நாடு மட்டுமே என்பதை நாம் மறந்து விடக்கூடாது' என்றும் கூறியிருப்பதோடு, வெளிநாடுகளுக்குச் சென்று பணியாற்றும் இந்திய நாட்டவர்களிற் பலர் தமிழர்களாக இருக்கிறார்கள். அவர்களெல்லாம் ஆங்கிலவழிக் கல்வி பயின்றவர்களே யல்லாமல் தமிழ் வழிக் கல்வி பயின்றவர்களல்லர் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

ஒன்று நிலைபெற்றுவிட்டமையாலேயே அஃது எத்துணை தீமையானதாக இருந்தாலும் அவற்றைத் தவிர்க்கக் கூடாது என்பது எப்படி அறிவுடைமையாகும்? பல்லாயிரம் ஆண்டுகளாகப் படிந்தும் பதிந்தும் இறுகிக் கிடக்கும் எத்தனையோ நிலைகள் அறிவாராய்ச்சியின் அடிப்படையில், உரிமையுணர்வெழுச்சியினால் உடைத்தெறியப் படும்போது நிலைபெற்றுவிட்டன என்று கூறி அவற்றை ஏற்க வேண்டும் என்பது என்ன ஞாயம்? அஃது எப்படிச் சிறுபிள்ளைத் தனமானமாகிவிடும்?

ஆங்கிலவழிப் பள்ளிகளில் வகுப்பறையில் மட்டுமன்றி, பள்ளி வளாகத்திலுங்கூடத் தாய்மொழியில் - தமிழில் தப்பித் தவறிப் பேசினால்கூட மாணவர்கள் கடுவெயிலில் நிறுத்தப் படுகிறார்கள்; ஒறுப்புக் கட்டணம் செலுத்துமாறு வலியுறுத்தப் படுகிறார்கள்; `I wont Speak Tamil' என்று அட்டையைக் கழுத்திலே தொங்கவிட்டபடி மண்டியிட்டுக் கொண்டு வகுப்புதோறும் இட்டுச் செல்லப்படுகிறார்கள். இவையெல்லாம் தாய்மொழியை அவமதிக்கும் செயல் என்று கருதாமல் வேறு எப்படிக் கருதுவது?

ஆங்கிலம் இணைப்பு மொழியாக இருக்க வேண்டும் என்றால் அனைத்துப் பாடங்களையும் ஆங்கில வாயிலாகவே பயில வேண்டும்; தாய்மொழியைத் தலையெடுக்கவொட்டாமல் நசுக்குவது என்று பொருளா? மற்ற மாநிலங்களிலெல்லாம் தமிழ்நாடு போல் ஆங்கிலவழிப் பள்ளிகள் அடர்ந்து தாய்மொழியுணர்வையே தரைமட்டமாக்கிக்

கொண்டிருக்கின்றனவா? அங்கெல்லாம் அப்படியில்லை என்பது வெளிப்படை. அவ்வாறிருக்க ஆங்கிலம் இணைப்பு மொழி என்பதேகூட பொருளுடையதாக இல்லையே.

இனி, ஆங்கிலந்தான் இணைப்பு மொழியாக இருக்க வேண்டும் என்பதுதான் என்ன கட்டாயம்? அனைத்து மொழிகளும் ஆட்சிமொழியாகும் நிலை ஏற்படும்போது ஆங்கிலத்தின் தேவைதான் என்ன?

மும்மொழித் திட்டம் எப்படி முறையற்றதோ அவ்வாறே இருமொழித் திட்டமும் ஏற்கத் தகாததாகத்தானே இருக்கிறது? இருமொழித் திட்டத்தால் தமிழ் ஒப்புக்குச் சப்பாணியாக்கப்பட்டதும், தமிழ் வழிக் கல்வி நரங்கிக் கிடப்பதும் அனைத்துத் துறைகளிலும் ஆங்கிலமே தலைவிரித்தாடுவதுந் தவிர நாம் பெற்ற பயனென்ன?

ஆங்கிலவழிக் கல்வி பயிலாத - பயிலும் வாய்ப்பில்லாத இங்குள்ள பெரும்பான்மைத் தமிழ் மக்களெல்லாம் அறிவிக்கப்படாத இரண்டாந்தரக் குடிமக்களாகவே ஏக்கற்று நிற்பது கண்கூடு.

ஆங்கிலவழிக் கல்வி பயின்று அயல்நாடு சென்று; பணியாற்றுபவர்களால் தமிழ்நாட்டு மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் நன்மை என்ன? பல்லாயிரவரில் பத்துப்பேர் அயல்நாட்டில் சென்று வயிறுவளர்ப்பதற்காக இங்குள்ள மக்களெல்லாம் நூற்றுக்கு நூறுபேரும் ஆங்கிலவழியில் பயிலவேண்டும்; அரசு அதற்காகப் பெருந்தொகையைச் செலவிட வேண்டும் என்பது எப்படி நயன்மையாகும்?

தமிழ் நாட்டரசு தமிழ்க்கென்று தனித்துறை வகுத்து - அமைச்சர் தமிழ்க்குடிமகனார் தமிழ் நலப்பணிகளில் முனைந்து செயற்பட்டுவரும்போது சட்டப்பேரவைத் தலைவர் தமிழ்வழிக் கல்விக்கு - அரசின் கொள்கைக்கு மாறுபாடாக பேசுவது வருந்தத்தக்கது. இத்தகையப் போக்கு தி.மு. கழக அரசுக்கு நலிவை ஏற்படுத்துவதோடு எதிர்நிலையினர்க்கு ஆக்கமாக அமைந்துவிடும். ஆகவே அந்நிலைக்கு வழி வகுக்கக்கூடாது என்றும் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

- இறை

தென்மொழி

தூயதமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்
(ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.)

ஆண்டுக்கட்டணம்	உருபா.	48.00
அரையாண்டுக்கட்டணம்	உருபா.	24.00
தனியிதழ்	உருபா.	4.00

வெளிநாட்டுக் கட்டணம்

1. வானூர்திவழி ஆண்டுக்கட்டணம் - 300/-
2. கப்பல்வழி ஆண்டுக்கட்டணம் - 200/-

தமிழை அழித்துவிட்டுத் தமிழனை வாழவைக்க முடியுமா?

- மா. பூங்குன்றன்

'ஓர் இன மக்களை அழிக்க வேண்டுமானால் முதலில் அவர்கள் பேசும் மொழியை அழி' என்கிறது ஒரு மேலைநாட்டுப் பழமொழி. இதைத்தான் நாம் தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்திப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இப்போது தமிழ்நாட்டில் அதிகாரிகளும் சரி, துறை வல்லுநர்களும் சரி, தொழிலாளுநர்களும் சரி ஒரு சிலரே தமிழர்கள் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

இதற்கிடையில் திராவிட முன்னேற்றக் கழக அரசு பதவியேற்று, தமிழைப் பயிற்று மொழியாக்க வேண்டும் என்று பேசத் தொடங்கிய உடனே பல மட்டத்திலிருந்தும் எதிர்ப்பும் ஏளனமும் எழுப்பப் படுகின்றன. இவற்றை உருவாக்கிக் காட்டுபவர்களில் ஒருவர்தாம் 'துக்ளக்' - சோ இராமசாமி.

26 ஆண்டுகளுக்கு முன்பே அற்றைத் தி.மு.க. ஆட்சியில் இதேபோல் ஆங்கிலத்தை மாற்றித் தமிழைப் பயிற்று மொழியாக நடைமுறைப் படுத்தப் பார்த்ததாகவும் அதைத் துக்ளக் சோ - இராமசாமி எதிர்த்ததாகவும் மீண்டும் அம்முயற்சி தொடங்கப்படுவதாகவும் தம் இதழில் கூறியிருக்கிறார்.

26 ஆண்டுகளுக்குப் பின்பு இந்த நிலை வந்ததாகக் கொண்டால் இது ஒரு தனிப்பட்ட அரசியல் கட்சியின் கொள்கையா? இக் கொள்கை மக்களுக்குத் தீங்கானதா? அவரவர் தாய்மொழியில் சரியாக விளங்கக் கற்று அதன்வழிக் கண்டுபிடிப்புகளை உருவாக்க வேண்டும் என்கிற உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்வதுதான் தமிழ்ப் பயிற்றுமொழிக் கொள்கையின் நோக்கம்.

இக் கொள்கையை ஏதோ ஓர் அரசியல் கட்சி தன் அரசு விளம்பரத்திற்காக நடைமுறைப் படுத்தப் பார்க்கிறது என்று கொச்சைப் படுத்திக் கெடுக்கப்பார்ப்பது என்பது ஒரு நாட்டின் மக்கள் முன்னேற்றத்தை ஒடுக்கி இனத்தை முடமாக்கும் வேலையாகும். இதைத் தான் துக்ளக் சோ - இராமசாமி செய்துகொண்டு, மேற்பூச்சுப் பூசி உண்மை போல் திரித்துக் கூறிவருகிறார்.

'காலப்போக்கில் தமிழ்மொழி தொழில் நுட்பத் துறைகளில் வளர்ச்சி பெற்றுத் தமிழகமும் பொருளாதார ரீதியாகப் பெரும் உயர்வு பெற்று, இங்குள்ள இளைஞர்கள் வேலை தேடி வெளியே

செல்ல வேண்டிய அவசியம் இல்லை என்ற நிலை வந்தால், அப்போது தமிழில் தொழில் நுட்பக் கல்வி போதிக்கப் படுவதில் அர்த்தம் இருக்கும்.'

இவ்வாறு சோ கூறுகிறார். தமிழ் பயிற்றுமொழி யாகாமல் அதில் ஆய்வு செய்து உயர்த்தாமல் தானாகவே தொழில் நுட்பத் துறைகளில் தமிழ் வளர்ச்சி பெற்று விடுமா? வேற்று மொழியில் பயிற்சி பெற்று வெளியில் போய்ப் பணியாற்றி அவ்விடத்தைச் செழுமைப் படுத்துவதால் தமிழகம் பொருளியியலில் உயர்வு பெறுமா? படித்துவிட்டு வெளியில் சென்று வேறு நாடுகளில் கூலியாக இருக்கும்போது இந்நாட்டில் எப்படி வாய்ப்பு ஏற்படும்?

இந்தப் பேச்செல்லாம் வெறும் ஏமாற்று வேலையாகத்தான் முடியும். மேலும் அவர் கூறுவதிலும் எத்தனை முரண்பாடுகள் உள்ளன என்பதைப் பார்ப்போம்.

அறிவியல் என்பது ஆங்கிலேயர்களுக்கோ ஆங்கிலத்திற்கோ உரியதன்று. அறிவியலறிஞர்கள் அனைவரும் ஆங்கிலேயர்களும் அல்லர். உலகில் எந்த மூலையில் அறிவியல் முன்னேற்றம் ஏற்பட்டாலும் அதை உலக முழுவதும் மொழி, இன வேறுபாடு இல்லாமல் பயன்படுத்திக் கொள்ளும். அதைப் பற்றிய விளக்கங்களைத் தம் மொழியில் மக்கள் எழுதிப் படித்துக் கொள்வர். இதுதான் உலக இயங்கியல் போக்கு. அறிவியல் கண்டுபிடிப்பாகத் தொடக்கக் காலத்தில் இருந்த தீயை உருவாக்கியவன் 'தீ'யை என்னவென்று அழைத்தானோ அதையே உலக மக்கள் அனைவரும் அழைக்க வேண்டுமெனக் கட்டுப்படுத்த முடியுமா? கண்டு பிடிப்பு அவனுடையது என்று பதிவுரிமை செய்துகொள்ளத்தான் முடியுமா?

எங்கு அறிவியல் கருத்துகள் தோன்றினாலும் அவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துப் பதித்து வந்ததால் இன்றைக்கு உலகத்தில் ஆங்கிலம் கொடிகட்டிப் பறக்கிறது. உலகையே பெருமளவிற்கு ஆளுமை செய்கிறது. பொறியியலைப் படிக்க வேண்டுமென்றால் மூலநூல்கள் செருமானியில்தான் உள்ளன. அதைப் படிக்கிறோமா? ஆங்கில மொழிபெயர்ப்பைத்தானே படிக்கிறோம். மொழிபெயர்ப்பு என்று வந்துவிட்டால் நேரடியாகத் தமிழ் மொழிபெயர்ப்பைப் படிப்பது உயர்வுதானே?

அறிவியல் கற்றல் என்பது ஒரு மொழியைக் கற்றல் ஆகாது. அறிவியல் மொழிக்கூறு சார்ந்ததும் அன்று. தாய்மொழியில் தான் அறிவியலைச் சரியாக விளங்கிக் கொள்ள முடியும் - ஆங்கிலத்தில் பயில்வதைவிட மிக எளிதாகக் கற்றுக்கொள்ள முடியும் என்றால் ஆங்கிலத்தில் விளங்கிக் கொள்ளும் முயற்சிக்கு வேறு வீணாக

ஆற்றலைச் செலவழிப்பதினும் மேற்கொண்டு அறிவியல் ஆக்கத்தைப் பற்றிச் சிந்திக்கலாமே.

அவ்வாறு சிந்தித்துப் புதிய கண்டுபிடிப்புகளை இங்கேயே உருவாக்குவது ஒன்றே பன்னாட்டு ஆளுமை (ஆதிக்க)ப் போக்குகளைத் தவிர்க்கும். அவ்வாறு பன்னாட்டு ஆளுமைப் போக்குக்குத் துணை நிற்கும் சோ போன்ற வெளிநாட்டுக் கைக்கூலிகள்தாம் இந்தத் தாய்மொழி வழிக் கல்வியை எதிர்க்கிறார்கள் என்பதை இதில் தெரிந்து கொள்ளலாம்.

சப்பான்காரர்கள், ஆங்கில அறிவு இல்லாததால் ஏற்படும் வலுவின்மை (பலவீனம்)யை உணர்ந்து இப்போது ஆங்கிலம் கற்கத் தொடங்கியுள்ளதாகச் சோ குறிப்பிடுவது மிகவும் புதிய செய்தி - மாறான செய்தி. உண்மையில் சப்பானியர் ஆங்கிலம் கற்பரேயானால் ஆங்கிலேயரை ஆளுமை செலுத்துவதற்கேயாக இருக்கும். இன்றைக்கு உலகச் சந்தையில் அமெரிக்கரையும் விழுங்கிக் கொண்டிருக்கும் சப்பான் ஆங்கிலத்தைக் கற்காதது வலுவின்மை என்று அவர்கள் கருதுகிறார்கள் எனச் சோ கூறுவது கண்கட்டு ஏமாற்றே.

மேலும் இங்கு இருக்கும் அறிவு தமிழ் வழிக் கல்வியால் அழிந்து போய்விடும் என்று எவ்வாறு குறிப்பிடுகிறார் என்பது தெரியவில்லை. ‘ஆங்கிலத்தில் படித்தால் அறிவு கூடிவிடும். அதைச் சப்பானியர் இப்போது பெற முயற்சி செய்கின்றனர்’ என்றும், ‘தமிழில் படித்தால் இருக்கும் அறிவு இழந்து போய்விடும்’ என்று சோ கூறுவதைப் பார்த்தால் சோ - இராமசாமி ஆங்கிலத்திற்காக தன் அறிவை இழந்தோ அல்லது பிறர் இழக்கவோ பேசுகிறார் என்று தெரிகிறது.

அடுத்து, பொறியியலை எந்த மொழியில் படித்தாலும் அவர் பொறியாளர்தாம். தமிழ்ப் பொறியாளர் என்றோ ஆங்கிலப் பொறியாளர் என்றோ பிரிக்கமுடியாது. அவருடைய பொறியியல் திறமையைத்தான் எடுத்துக்கொள்ள முடியுமே தவிரத் தன்மொழித் திறமையை அன்று. அவருக்கு எளிதான மொழியில் படித்திருந்தால் அவர் இன்னும் பொறியியல் திறமையை வளர்த்துக் கொண்டிருப்பார் என்றே கூறலாம்.

தம் துறையில் திறமையாக இருந்தால் எந்த மொழியில் நேர்முகத் தேர்வு எங்கு நடத்தாலும் அவர் துணிந்து செல்வார். சோ எடுத்துக் கூறுகிற நேர்மின்வாய், அரிதிற் கடத்தி போன்ற கலைச் சொற்களை எந்த மொழியிலும் மொழிபெயர்த்துக்கொள்ள முடியும். அதன் கருத்தை (Concept) அவர் உள் வாங்கிய பிறகு மொழி புற வடிவம்தான். ஆங்கிலம் பேசத் தெரிதலேகூட இதற்குப் போதுமானது. அதற்கு வாழ்நாள் முழுவதும் ஆங்கிலத்தைத் தொழுது வீணடித்துக்

கொண்டிருக்கத் தேவையில்லை. இவற்றையெல்லாம் இன்று முடிவு செய்ய வேண்டியவர்கள் அதன் துறை வல்லுநர்களே. சோ போன்ற திரிபுக் கருத்தாளர்கள் அல்லர். அரசியல்காரர்களில் செய்பவர்களையும் செய்ய வொட்டாததுடன் மக்களையும் குழப்பும் நல்ல (!) பணியை இப்போது சோ செய்கிறார்.

'தமிழில் பட்டம் பெற்றால் தமிழ் நாட்டிலேயே வேலை கிடைக்க உத்தரவாதம் அளிக்கப்படுமா?' என்பது போன்ற குட்டை குழப்பும் வேலை செய்கிறார். வேலை வாய்ப்புகள் பரவலாகி விடுவது - வேலை இல்லாமைக்குத் தீர்வாகிவிடாது. ஏமாளி மக்களை அங்குமிங்கும் ஏவி அலைச்சலுக்கு உட்படுத்துவதாகத்தான் முடியும்.

வெளிநாட்டுக்குச் செல்ல வாய்ப்புள்ளது என்று கூறி ஆங்கிலத்தில் பயில்வது என்பது ஒரு நிலை. இவ்வாறு கூறியே வெளிநாடுகளுக்குக் கூலியாகச் சென்றவர்களால் இந்நாடு என்ன முன்னேற்றம் கண்டது? இந்நாடே வெளிநாடுகளுக்குத் தேவையான பணியாளர்களுக்குப் பயிற்சி கொடுக்கும் நிறுவனமானதுதான் மிச்சம். அதுவும் இந்த நாட்டு அடித்தள மக்களின் வரிப்பணத்தில் படித்துப் பட்டம் பெறும் பார்ப்பனர்கள்தாம் அவ்வாறு வெளிநாடுகளுக்கு மிகுதியாகச் செல்கின்றனர்.

இந்த நாட்டை வளப்படுத்த வேண்டும்; அதன்வழி இந்த மக்கள் முன்னேற வேண்டும் என்ற கொள்கையுள்ள அறிஞர் யாரும் அவ்வாறு இந்நாட்டில் படித்து - பயிற்சிபெற்று வெளிநாட்டுக்குக் கூலியாகச் சென்று பிழைத்துக் கொள்ளுங்கள் என்று கூறச் சிந்திப்பாரா? - சோ போன்றவர் கூறும் அறிவுரை இதுதானா? இந்த நாட்டு மக்களின் அறிவையும் உழைப்பையும் உறிஞ்சிக்கொண்டு அந்நாடுகள் முன்னேறவும் இந்நாட்டை வெறும் வணிகச் சந்தையாக மாற்றவும் தான் சோவின் கருத்து நல்ல கருத்தாகிறது.

ஒரே தாய் மொழியைக் கொண்ட - ஒரே திறன் கொண்ட இரு மாணவர்களில் ஒருவரைத் தமிழ் வாயிலாகவும் மற்றொருவரை ஆங்கில வாயிலாகவும் பயிற்றுவித்தால் உறுதியாகத் தாய்மொழியில் பயின்றவர் திறன் அதிகமாகத்தான் இருக்கும் என்று யாரும் கூறுவர்.

இந்தியைத் தாய்மொழியாகக் கொண்ட இந்திய மக்களிடையிலும் அவர்கள் தாய்மொழியான இந்தியில் படிக்க ஏந்து செய்திருப்பதை நாம் வரவேற்கிறோம். இந்தியை இணைப்பு மொழியாகக் கற்க வேண்டும் என்று கூறுகிற சோ, இந்திக்காரர்களுக்கும் ஆங்கிலம்தான் அறிவியல் பயிற்றுமொழி என்று சொல்கிறாரா? அல்லது அவர்கள் இந்தியில் படிக்கட்டும் என்று கூறுவாரானால் தமிழர்கள் மட்டும்

இளைத்தவர்களா - என்பதைச் சோ விளக்கட்டும்.

இவ்வாறிருக்கையில் திறன் மிகுந்த மாணவர்கள் ஆங்கிலத்தில் திறன் குறைவு என்ற ஒரே காரணத்திற்காக அவர்களின் திறன் முடக்கப்படுவது ஒரு நாட்டிற்கு இழப்பு தானே? இந்த நிலைதான் தமிழ்நாட்டில் இன்று நிலவுகிறது. திறன் மிகுந்த தமிழ் நாட்டினர் ஆங்கிலப் பயிற்றுக் கல்வியால் காயடிக்கப் படுகின்றனர் என்பதே தெளிவான உண்மை.

மொத்தத்தில் இந்நாடு உலக நாடுகளுக்குச் சந்தையாக மட்டுமே இருக்க வேண்டுமே தவிர, தனியாகப் பொருள்கள் உருவாக்கிவிடக் கூடாது; அதற்கான தொழில் நுட்பம் வளர்ந்துவிடக்கூடாது என்பதில் கவனம் செலுத்தப்படுகிறது.

கொடுக்கப்படுகிற கல்வி பன்னாட்டு உருவாக்கத்திற்குத் துணையான ஆட்களை உருவாக்கப் பயன்பட வேண்டுமே தவிர, ஒரு நாட்டின் தன்னாக்கத்திற்குப் பயன்படத் தேவையில்லை. அதனாலேயே ஆங்கில வழிக் கல்வி மட்டுமே பயன்படுகிறது.

இந்தச் செயற்பாடுகளின் ஒரு கூறுதான் சோ இராமசாமி போன்ற அமெரிக்க முகவர்களின் அரிய பணி. அதைச் செவ்வனே செய்வதால் வரும் தீங்கு இந்நாட்டில் வாழும் அனைத்து மக்களையும் தாக்கும்.

செஞ்சட்டை பஞ்சாட்சரம் மறைவு

தமிழ் இன மறவரும் பெரியார் கொள்கைகளில் மிகுந்த பற்றுக் கொண்டவருமான 'அறிவு வழி' இதழின் ஆசிரியராகிய பெருந்தொண்டர் செஞ்சட்டை பஞ்சாட்சரம் 25.10.96 - ஆம் நாள் ஒரு சாலை நோச்சி ஒன்றில் மறைந்தார். தமிழ் இனத்திற்கான சென்னையில் நடக்கும் எல்லாப் போராட்டங்களிலும்,யார் நடத்தினாலும் அதில் பங்கேற்றுத் தண்டனை பெறுவது இவரின் தீரா இனப் பற்றைக் காட்டும். சென்னையில் நடக்கும் தமிழின நிகழ்ச்சிகளுக்குத் தம் மிதிவண்டியிலேயே சென்று பங்கேற்பார். அவரின் அரிய தொண்டினைத் தென்மொழி நினைவு கூர்ந்து தன் இரங்கலை அவர்தம் குடும்பத்தினர்க்கும் தோழர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறது

-ஆசிரியர்

அண்டைத் தமிழர் அயலவரா ?

தமிழரிமாப் பாவலர். இளஞ்சித்திரன்

எங்கே சொல்வோம்? தம்பீ, நாம்!
எங்குப் போய்நின் றழுதிடுவோம்?
எங்கும் அடுக்கா உயிர்க்கொலைகள்
ஈழத் தமிழர் திருமண்ணில்!
இங்கே கேட்க ஒருவரில்லை!
எடுத்துப் பேச எவருமில்லை!
இங்கே தமிழர் எனும்பெயரில்
எதற்கு நாமும் இருக்கின்றோம்?

நம்மில் எவர்க்கும் சூடில்லை!
நாணம் மானப் பொறுப்பில்லை!
நம்மின் வரிகள், பணத்தினிலே
நாடாள் மன்றம் இருக்கிறது!
நம்மின் தலைவர் என்பார்கள்
நாளும் என்ன செய்கின்றார்?
கும்மி அடித்துப் பேசிடவோ!
கூடிக் கூடிக் கலைந்திடவோ!

அண்டை நாட்டில் ஒன்றென்றால்
அதிலே நமக்குப் பங்கிலையா?
வெண்டைத் தனமாய்ப் பேசுகின்றார்!
வெட்டிப் பொழுது போக்குகின்றார்!
சுண்டைக் காய்நா(டு) அதைத்திருத்தத்
துணியா திருப்ப தென்னேயோ!
அண்டைத் தமிழர் அயலவரா?
அவர் நம் அரத்த உறவிலரா?

அவர்க்கு நயன்மை யார்தருவார்?
அவரின் உயிரை யார்காப்பார்?
எவர்க்கும் உலகில் பொறுப்பிலையா?
என்னே மாந்த நேயந்தான்!
உவர்க்கும் கடல்சூழ் ஈழத்தின்
உரிமை யார்க்கு? சிங்களர்க்கென்(று)
எவரிவ் உலகில் எழுதிவைத்தார்?
இயற்கை தந்த பட்டயமா?

ஆரை ஆரிங் கரற்றுவது?
அடிமை கள்போல் நடத்துவது?
தாரை வார்த்தா தந்திட்டார்
தமிழ இனத்தைச் சிங்களன்பால்?
போரை நடத்தி வெறியாட்டம்
போடு கின்றான் அவர்புலத்தில்!
ஈரை, பேனை நசுக்குதல்போல்
இவனை நசுக்க எந்நேரம்?

நமக்கும் உலகம் சொந்தந்தான்!
நாமும் உலகில் மக்கள்தாம்!
நமக்கென் றிருக்கும் மண்நிலத்தில்
நம்மை ஆள இவன்கள்யார்?
நமக்கு நாம்தாம் அரசர்கள்!
நம்வீட் டில்நாம் தலைவர்கள்!
நமக்குப் பிறர்மண் ஆசையில்லை;
நாமும் பிறரை ஆள்வதில்லை!

கண்கெட் டலையும் சிங்களனைக்
காக்கத் தானா நம்மரசு?
புண்பட் டேநாம் உரைக்கின்றோம்!
பொறுப்பா ளில்லை இயற்கைத்தாய்!
விண்பட் டெழுமோர் அறப்பிழம்பு;
விரையும் ஒருநாள் சிங்களர்வாழ்
மண்ணைத் தாக்கும்! அறமுணர்த்தும்!
மடியும் அவர்தம் பேரினமே!

அன்னை இயற்கை பெற்றளித்த
அறமே தமிழர்! மன்பதையின்
முன்னை மூல வேரவர்கள்!
மூல வேர்க்கங் கழிவென்றால்
பின்னை உலகே இருக்காது!
பிழைக்கா தழியும் எல்லாமே!
என்னை உணர்ந்தே சொல்கின்றேன்!
எழுதி வைத்துக் கொள்வீரே!

சிற்றூர்ப்புறக் கலைகளின் மறுமலர்ச்சியும் - உயிரூட்டலும்

- அதியமான்

மாந்தரிடம் மொழி நல்ல வளர்ச்சியடைந்ததும், அவர்களுடைய மனமகிழ்ச்சிக்கும்பொழுது போக்கிற்கும் ஆனவே சிற்றூர்ப்புறக்கலைகள். பாடல்கள், உரையாடல்கள் ஆகிய இரண்டும் கலந்து மாந்தர்களுடைய வாழ்க்கையை விளக்கும் காட்சிகளாக அமைந்தன.

இக் கலைகளை அக்கால மக்கள் மிக மகிழ்ச்சியோடு கண்டு களித்தனர். அக் கலைகளை வளர்த்தவர்களை மக்கள் மதிக்கவும் செய்தனர். தெருக்கூத்து, கும்மி, கோலாட்டம், உடுக்கைப் பாட்டு, மேளங்கள், கரக ஆட்டம், காவடியாட்டம், வில்லுப்பாட்டு, கணி கையர் கூத்து, சாய்வாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், மயிலாட்டம்,எதிர்ப்பாட்டு(இலாவரை) இன்னும் பல வகையான கலைகள் தமிழகத்தில் நடத்தப்பட்டு மக்களை மகிழ்ச்சியடையச் செய்தன. பணி செய்த மக்களுக்குக் களைப்பு நீங்க அவை பயன்பட்டன. இக் கலைகளை மக்கள் சிற்றூர்ப் புறங்களில் நடக்கும் விழாக்களில் பயன்படுத்தி அக் கலைஞர்களுக்கு வாழ வகைகளும் செய்து கொடுத்தனர். அதனால் அக் கலைகள் வாழ்ந்தன.

அறிவியல் வளர்ச்சியில் இக் கலைகளை அடிப்படையாகக் கொண்டு நாடகங்களையும், இக்காலத்தில் பேசும் படங்களையும் வெளியிட்டனர். எனவே மூலக்கலைகளாகிய அக் கலைகள் மறைந்து போகச் சில மட்டும் நடத்தப்படுகின்றன. அவையும் வருங்காலத்தில் மறையும் சூழல்நிலை இருக்கின்றது. அக்கலைத் தொழில்கள் சரியாக நடைபெறாததால் கலைஞர்கள் வறுமையுற்று இக் கலைகளை மேலும் மேலும் பயில வேண்டும் என்ற ஆர்வம் குறைந்து, இக் கலைகளைக் கைவிட்டுவிட்டு வேறு தொழில்கள் செய்ய முயன்றும் வருகின்றனர்.

இக்கலைகள் மக்களுக்கு இன்பநுகர்ச்சிக்காக அமைந்தன. சிலவற்றை அறநெறிகளைக் கற்பிக்கும் பள்ளிகள் என்றுகூடக் கூறலாம். சில, மக்களை மூடர்களாக்கியதும் உண்டு. புராணங்கள், கற்பனைக்கும் எட்டாத வரலாறுகள், காட்சிகள் போன்றவற்றைப் பாடல்கள் உரைநடைகள் மூலம் மக்களிடத்தில் இன்றும் பரப்பி வருகின்றனர்.

பழங்காலந்தொட்டு வளர்ந்துவந்த இச் சிற்றூர்ப்புறக் கலைகள் சமயத் தொடர்பான வரலாறுகளையும் மூடக் கொள்கைகளையும்

பரப்பிவரத் தொடங்கின. அவற்றை மக்கள் கேட்டுக் கேட்டுச் சலித்து விட்டனர். அறிவியல் வளர்ந்து சிந்தனைகள் மக்களிடத்தில் தோன்றியபின் இக் கலைஞர்கள் கூறும் கருத்துகள் அருவருத்து ஒதுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டன. எனவே மக்கள் இக் கலைஞர்களுக்காக மக்களிடமோ, அரசிடமோ பரிந்து பேசும் நிலையும் இல்லாமல் போய்விட்டது.

இக் கலைஞர்கள் நிகழ்த்தும் கலை நிகழ்ச்சிகளில் மறுமலர்ச்சிக் கருத்துக்கள் புகுத்தப்பட வேண்டும். நாட்டின் நிலைகள், அரசியல் போக்குகள், நல்ல இலக்கிய வரலாறுகள், மக்களுக்குத் தேவையான நல்லறக் கருத்துகள் போன்றவற்றைக் கற்று அவற்றைப் பாடல்களாகவும், உரைநடைகளாகவும் ஆக்கி இக் கலைஞர்கள் நடத்த முன்வரவேண்டும். மக்கள் வளம்பெற உழைத்த தலைவர்களுடைய வரலாறுகள், அப் பெரியவர்கள் கூறிய கருத்துகள், அறிவுரைகள் இக்கலைகளில் புகுத்தப்படல் வேண்டும்.

இக் கலைகள் மூலம் அறிவுக் கருத்துகளை மக்களிடம் பரப்ப மக்கள் மீது அன்புகொண்ட தலைவர்கள், சீர்திருத்தம் பேசும் இயக்கங்கள் ஆதரவு கொடுக்க வேண்டும். இக் கலைகள் விரைவில் மறுமலர்ச்சி பெற வேண்டிய ஆக்கப் பணிகளை இயக்கங்கள் செய்ய வேண்டும்.

மக்களிடத்தில் இக் கலைஞர்கள் நன்மப்பைப்பெற மக்களுக்குத் தேவையில்லாக் கருத்துகளைக் கொண்ட புராணக் கற்பனை வரலாறுகளை நிகழ்ச்சிகளாக நடத்துவதைத் தவிர்க்க வேண்டும். இன்றும் வானொலி, தொலைக்காட்சிகளில் அப்படிப்பட்ட வரலாறுகளையே நடத்தும்படிச் செய்து வருகிறார்கள். மக்களுக்குப் பயன்படும் அறிவு வளர்ச்சிக்கு உரமாக அமையும் கருத்துகளைக் கொண்ட நிகழ்ச்சிகளை நடத்த ஊக்குவிக்க வேண்டும். அப்படியானால்தான் சிற்றூராப்புறக் கலைகள் மறையாமலிருக்கும். அவற்றைக் காலத்திற்கு ஏற்றாற் போல மாற்றியமைக்க வழிவகுக்கவேண்டும். அக்கலைகளை மறுமலர்ச்சி வழிகளில் திருப்பி உயிரூட்ட வேண்டும்.

புகழ்படைத்த வரலாற்றைப் பொய்யாய்த் தள்ளிப்
புளுகுக்குப் 'புராணங்கள்' எனும்பே ரிட்டுத்
திகழ்கின்ற பெருமையுடன் அவற்றை யெல்லாம்
தெருத்தெருவாய்ப் போய்ச் சொல்லிப் பெருமையோடு
நிகழ்கின்ற விழாக்களிலே ஆரியத்தை
நிலைநிறுத்தி அதற்குக்கீழ் நீங்கள் நின்றே
இகழ்தேடும் தமிழர்களே! உருப்பட் டீரா?
இனியேனும் ஒன்றிணைந்தே இனங்காப் பீரே

- பாவலரேறு (கனிச்சாறு 67.)

மக்களவை

‘தமிழ்கள்’ - ஒரு விளக்கம்

எனது தன்னிலை விளக்கம் குறித்தும், ‘தமிழ்கள்’ என்கிற சொல்லாட்சி குறித்தும் தென்மொழி (சு: 28 ஓ: 10)யில் வந்திருந்த மடல்கள் கண்டேன். இன்றைய அரசியற் சூழலுக்கு மிகவும் இயைபுடைய ஒரு கருத்தாடலுக்கு இடமளித்துள்ள தென்மொழி ஆசிரியர்க்கு என் நன்றி. நண்பர்கள் எழுப்பியுள்ள கேள்விகளுக்கு எனது சுருக்கமான விடையுரைகள் வருமாறு.

1. ஓர் இனத்துக்கு ஒரு மொழிதான் இருக்க முடியும். கன்னடருக்குக் கன்னடம், தெலுங்கருக்குத் தெலுங்கு என்கிறார் இளங்கோவன். நல்லது. சுவிட்சர்லாந்துக் காரருக்கு...? நாகருக்கு...? இந்தியத் துணைக்கண்டத்தில் வாழும் நாகரினத்தவர் பதினாறு மொழிகள் பேசுகின்றனர். ஐரோப்பாவில் வாழும் சுவிட்சர்லாந்தினர் நான்கு மொழிகள் பேசுகின்றனர். இருந்தும் அவர்கள் அரசியல் நோக்கிலும் உணர்வு அடிப்படையிலும் ஒரே இனத்தவராகவே அடையாளம் காணப்படுகின்றனர். அதே போல ஒரே மொழி பேசுகிறவர்கள் வெவ்வேறு இனத்தவராக ஒருவரோடொருவர் மோதிக் கொண்டிருப்பதற்கும் ஏராளமான எடுத்துக்காட்டுகளைச் சொல்ல முடியும். எனவேதான் ‘மொழி’ உட்பட இயல்பான அடிப்படைகள் என இன உருவாக்கத்திற்கு ஏதுமில்லை. அரசியல் நோக்கிலேயே இனம் கட்டமைக்கப்படுகிறது. அவ்வாறு கட்டமைப்பது தவறு என நான் சொல்லவில்லை.

2. ‘முத்தமிழ்’ என்றுதான் சொல்லப்படுகிறதே யொழிய ‘கள்’ விகுதி கொடுக்க அறிஞர்கள் துணிந்தாரில்லை என்கிறார் இளங்கோவன். பன்மைத் தன்மைகளை அழித்து மற்றவர்களின் அடையாளங்களை மறுத்து ஒருமைக்குள் ஒடுக்குவது அதிகாரத்தன்மைக்கும் கொடுங்கோன்மைக்கும் வழி வகுக்கும் என்பதே என் கருத்து. ‘இந்து’, ‘பாரதம்’ என்கிற அடையாளத்திற்குள் ஒடுக்க முனைவது போலவே ‘தமிழ்’ என்கிற அடையாளமும் ஆகிவிடக் கூடாது என்பதே என் கவலை. எனது இந்தக் கவலை நேர்மையானது என்பதை இளங்கோவன் ஏற்பதில் தடையிருக்க வாய்ப்பில்லை. ஏனெனில் ‘தமிழர்’ என்கிற ஒற்றை அடையாளம் ஏதோ ஒரு வகையில் வன்முறையாக அமைவதை அவர்

உணர்ந்தமையால் தான் 'ஆதித் தமிழர் பேரவை' அமைத்து மீதித் தமிழரிடமிருந்து தமது தனித்தன்மையை நிறுவ முனைகிறார். தமிழைச் சிதைப்பதாய் என்னைக் காயும் நண்பர் இதற்கென்ன சொல்லப் போகிறார்?

எனவே 'பன்மை'குறித்த கருத்தாடலை நாம் இன்னும் ஆழமான தளத்தில் மேற்கொள்ள வேண்டும். 'கள்' விகுதி சேர்க்கப் படாததெல்லாம் 'ஒருமை' தானெனில்,

'மும்மலையும் முந்நாடும் முந்நதியும் முப்பதியும்
மும்முரசும் முத்தமிழும் முக்கொடியும் - மும்மாவும்'

என்று செல்லும் திருவள்ளுவமாலைச் செய்யுளுக்கு என்ன பொருள் சொல்வது? மூவேந்தர் என்பது ஒரு வேந்தரா? 'கள்' விகுதி குறித்துத் தொல்காப்பியம்கூட ஏதும் கூறவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

3. தொல்காப்பியம் - நன்னூல் - உரையாசிரியர் என்கிற மரபைக் காட்டி என்னை மறுக்க முனைகிறார் நண்பர். மரபின்வழி நின்று இச் சிக்கலுக்கு நாம் முடிவு தேட இயலாது. ஏனெனில் இம் மரபு பார்ப்பன - வேளாள மேற்சாதியினரால் பன்மைத் தன்மையை மறுத்து ஒருமைத் தன்மையைக் கட்டுவதற்கே உருவான மரபு. எனவே மரபை மீறி நின்றுதான் நாம் கருத்தாடிட வேண்டும். மரபை மீறுதல் எங்ஙனம்? - என நண்பர் சினங்கொள்வது நயன்மையில்லை. ஏனெனில் தனித் தமிழ் / தூய தமிழ் என்பதே இரண்டாயிரமாண்டுக் கால மரபை மீறிய முயற்சிதானே?

'வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
யெழுத்தொடு புணர்ந்த சொல் ஆகும்மே'

- தொல்காப்பியம் **(395)**

'பொதுவெழுத் தானும் சிறப்பெழுத் தானும்
ஈரெழுத் தானும் இயைவன வடசொல்'

- நன்னூல் **(274)**

- மேற்படி - - இலக்கண விளக்கம் **(175)**
- மேற்படி - - முத்து வீரியம் **(51)**

'வருமே தமிழில் வடமொழி யென்க'

- இலக்கணக் கொத்து **(88)**

-என வடசொல்லை இணைத்துக் கொள்வதுதானே தமிழ் மரபு! தனித்தமிழ்க் கொள்கை பற்றின நல்லதொரு நூலை எழுதியுள்ள புலவர் இளங்குமரனார் வண்டமிழ், தென்றமிழ் எனத் தமிழ் மரபில் பயிலப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட அடைகளைச் சுட்டிக் காட்டுகிறாரே அவற்றில் தனித் தமிழ் / தூய தமிழ் என்பன மட்டும் இல்லாமற் போனதேன்?

மரபை மீறி நின்றதே தனித் தமிழியக்கத்தின் தனிப்பெருஞ் சிறப்பு. மறைமலை அடிகளாரைப் போலச் சிவனியத்தினூடாகவும், தமிழ்ப் பன்மைகளை மறுக்கும் வடிவில் மற்றவர்களும் மீண்டும் மரபிற்குள் வீழ்வதே பெருமைக்குரிய அவ்வியக்கத்தின் பெருஞ்சரிவு.

4. மொழிக்குத் தன்னளவிலான அடையாளம், வகுப்பு / குமுகப் பின்னணி முதலியன கிடையா என்கிறார் தமிழ நம்பி. மொழியை வெறும் கருத்துச் சுமக்கும் கருவியாகக் கருதும் பழைய சிந்தனை இது. அவர் யாரைத் திட்டுகிறாரோ அந்த வரட்டு மார்க்சியர் முன்வைத்த கருத்தின் தாக்கத்திற்கு அவரே ஆளாகியிருப்பது வேடிக்கை. மொழியின் வகுப்புப் பின்னணி குறித்து இன்று தமிழ்ச் சூழலிலேயே கருத்தாடல்கள் நடைபெற்று வருகின்றன. நண்பர்கள் இவற்றைக் கவனிக்க வேண்டும். மொழிக்கு வகுப்பு / குமுகப் பின்னணி கிடையாது எனத் தொடங்கும் நம்பியின் கடிதத்து இறுதிப் பகுதியே அவருக்கு முரணாகி விடுகிறது. (அரசியல்) 'அணிதிரட்சிக்கு மொழி ஓர் அடிப்படை ஊடகமாக இருக்கிறது' என அவர் சொல்வதற்கு என்ன பொருள் என்பதை அவர் தான் விளக்க வேண்டும். சமற்கிருத நீக்கம் தேவையில்லை, முதன்மையான பணி அதுவன்று என நான் எங்குமே சொன்னதில்லை. ஆனால் சமற்கிருத நீக்கமென்பது வெறுமனே சொற்களைத் தூய்மை செய்வது மட்டுமன்று. கருத்தாக்க / உருவக (Figurative) அடிப்படையிலேயே தமிழ் வடமொழியாக்கத்திற்குள்ளாகியிருக்கிறது. அந்தக் கறையை நாம் போக்க வேண்டும். 'கர்ப்பக்கிருகம்' என்பதை 'கருவறை' எனக் குறிப்பிட்டால் மட்டும் போதாது என்றுதான் சொல்லி வருகிறோம்.

5. சிற்றூர்ப்புற மக்களின் மொழியாகிய தனித்தமிழை (?)க் கறை படிந்த மொழியாக நான் சொல்வதாக முழுப் பொய்யளக்கிறார் நம்பி. நான் அப்படிச் சொல்லவில்லை. எங்குமே எப்பொழுதுமே சொன்னதில்லை. மாறாக அம் மக்களின் மொழியையும் இயல்பான மொழியாக - இயற்சொல்லாக ஏற்க வேண்டும் என்பதே என் கோரிக்கை. ஆனால் தமிழ் மரபோ இதுவரை இவர்களின் மொழியைச் 'சேரி மொழி' 'சேரிச் சொல்லின் முட்டுற லஞ்சிச் செய்யுட்குப் புலவர் செய்து கொண்டன்றே' - புறச்சூத்திரம்) என்றும்' 'இழிசனர் மொழி' (பேராசிரியர்) எனவும், 'திசைச் சொல்' எனவும் இழித்துரைத்து வந்திருக்கிறது. தனித்தமிழ் இயக்கம் இது குறித்து இதுவரை கவலை கொண்டதுமில்லை.

இன்னொன்றுஞ் சிந்திக்கத் தக்கது. இசைத் தமிழ், நாடகத் தமிழ் முதலியன முத்தமிழ்களுள் ஒன்றாக ஏற்றுக் கொள்ளப்பட்ட போதிலும் தமிழ்மரபில் அவை இரண்டும் புறக்கணிக்கப்பட்டு

வந்தமைக்கு இசை / நாடகத் தமிழ் நூற்கள் அழிந்துபட்டதே சான்று பகரும். 'இசையில் அதிகப் பழக்கம் வைத்துக் கொண்டால் இலக்கண இலக்கியங்களில் தீவிரமாகப் புத்தி செல்லாது' என்று உ.வே.சாமிநாதருக்கு மீனாட்சி சுந்தரனார் 'புத்தி' சொன்னதை 'என் கதை'யில் காணலாம். இசை / நாடகத் தமிழ்களில் பன்மைக் கூறுகள் ஒலிக்க அதிகம் வாய்ப்பிருப்பதனாலேயே தமிழ்மரபு அதனை ஒதுக்கிற்று. தனித் தமிழ் இயக்கமும் கூட இசை / நாடகத் தமிழ்கள் குறித்தோ சிற்றூர்ப்புற மக்களின் நாட்டுப்புற இலக்கியங்கள், கலைகள் குறித்தோ கவலைப்பட்டதில்லை. பெருஞ்சித்திரனார் ஐயா போன்றவர்கள்கூட இயற்றமிழிலேயே எழுதி வந்தனர். மாறாக நம்பி யாரைத் திட்டுகிறாரோ அந்தப் பொதுவுடைமையர்தாம் நாட்டுப்புற இலக்கியங்களை உயர்வு செய்து வந்தனர்.

6. இயற்சொல், திரிசொல், திசைச்சொல் என்பன குறித்து இளங்கோவன் எழுதியுள்ளவை பெருங்குழப்பம். தொல்காப்பியரும், உரையாசிரியர்களும் தெரிவாய்ச் சொல்கின்றனர். செந்தமிழ் நிலத்தில் பயிலப்படுவது **இயற்சொல்**. ஒரு சொல் குறித்துப் பல சொல்லும், பல பொருள் கருதி ஒரு சொல்லும் வருவது **திரிசொல்**. செந்தமிழ் நிலமல்லாது அது சேர்ந்த பன்னிரு நிலங்களில் பயிலப்படுவது **திசைச் சொல்**. சேனாவரையர் இந்தப் பன்னிரு நிலங்களைக் **'கொடுந்தமிழ் நிலம்'** என்பார். எனவே திசைச் சொல்லே கொடுந்தமிழ் என்றாகிறது. சுருங்கச் சொன்னால் தமிழக நிலப் பரப்பிற்குள் (வடவேங்கடந் தென்குமரி...) பயிலப்படும் சொற்களில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் குறிப்பிட்ட மக்களால் பயிலப்படுவது இயற்சொல் எனவும் (Normal) மற்றவை சற்றே கீழானவை, திருத்தப்பட வேண்டியவை எனவும் பொருளாகிறது. எது அந்தக் குறிப்பிட்ட பகுதி? யார் அந்தக் குறிப்பிட்ட மக்கள்? காவிரிக்கரையை ஒட்டிய அரசுருவாக்க நடுவண்பகுதியே செந்தமிழ் நிலம். அங்கு ஆளுமை கொண்டிருந்த பார்ப்பன, வேளாள மேற்சாதியினர் வழங்கிய சொற்களே இயற்சொற்கள்!

"நீங்கள் அல்லாத மற்றவர்களின் இயற்சொற்களை திசைச் சொல் என இயம்பவும், உங்கள் சொற்களைப் பொதுமையானவை என வரையறுக்கவும் நீங்கள் யார்?" என நான் மட்டுமல்ல தெய்வச் சிலையார் தொடங்கிச் சங்கர நமசிவாயர் வரை கேட்ட கேள்விக்கு நம்பியும் இளங்கோவும் என்ன விடையுரைப்பர்?

7. 'பன்முக வாழ்க்கை - ஒருமுகப் பண்பு' என்கிற முழக்கத்தை தமிழநம்பி வைப்பது கண்டு அதிர்ந்து போனேன். இது பலமுறை இந்த மண்ணில் கேட்ட குரல். காந்தியார் அம்பேத்கரை நோக்கிச் சொன்ன சொற்கள் இவை. நேரு முழங்கிய சொற்கள் இவை.

(வேற்றுமையில் ஒற்றுமை). கடைசியாக இதனை ஒலித்தவர் அடல் பிகாரே வாச்பேயி. தலைமை அமைச்சராகப் பதவி ஏற்றபோது அவர் ஆற்றிய நெடிய உரை மேற்குறித்த சொற்களோடுதான் தொடங்கியது.

பன்மையில் ஒருமை, ஒருமையில் பன்மை என்றெல்லாம் நண்பர் குழப்புகிறாரே இவை அனைத்தும் இதுவரை பன்மைத் தன்மையை மறுத்த எல்லோரும் முன்வைத்த கருத்துகள்தாம். தனித்துவம் நசுக்கப்பட்டு அடையாளம் இழந்தவர்கள் உரிமைக் குரல் எழுப்பிய போதெல்லாம் ஒற்றுமையைச் சிதைப்பவர்களாகத்தான் குற்றம் சாட்டப்பட்டு வந்துள்ளனர். 'நிறப்பிரிகை' பற்றி நண்பர் குறிப்பிடுகிறார். 'நிறப்பிரிகை' என்ற சொல்லே ஒற்றைக்குள் ஒடுக்கப்பட்ட பன்மைகளை இனங்காட்டத்தான்.

8. அமைப்பாய்ச் சிந்திப்பதை, இயக்கமாய் ஒருங்கிணைவதை எதிர்ப்பவர் என்றெல்லாம் குற்றம் சாட்டப்பட்டுள்ளேன். இது குறித்து விரிவாய்ப் பலமுறை எழுதியுள்ளேன். இணைவுக்கு நான் எதிராளி அல்லன். எங்களது நடைமுறைகளும் அவ்வாறு இருந்ததில்லை. மற்றவர்களாக ஏற்று மற்றவர்களின் இருப்பிற்கு இடமளித்து இணையும் இணைவே வலிமையான, வன்கொடுமை இல்லாத, வெறித்தனத்திற்கு (Fascism) இட்டுச் செல்லாத இணைப்பாக இருக்க முடியும் என நான் நம்புகிறேன். பொது எதிரிக்கு எதிராக ஒன்றிணைவதை நாங்கள் மறுத்ததில்லை. அந்த வகையில்தான் 'மலைத் தமிழ்' பேசுவோரையும் 'கூலித் தமிழ்' பேசுவோரையும் ஒன்றிணைப்பது பற்றிப் பேசுகிறேன். நீங்களோ உங்கள் மலைத்தமிழும், கூலித் தமிழும் குற்றமுடையது. அதை உதறிவிட்டு வாருங்கள். எங்கள் மொழியை ஏற்றுக் கொள்ளுங்கள் என ஒதுக்குகிறீர்கள்.

ஒதுக்குவதும், ஒதுங்குவதும் பார்ப்பனியம். நீங்கள் ஒதுக்குகிறீர்கள். நாங்கள் ஒன்றிணைப்பின் வரையறை குறித்துப் பேசுகிறோம்.

9. கடைசியாக, கிறித்துவ நிறுவனங்களிடமிருந்து நான் பணம் பெறுகிறேன் என்கிற குற்றச்சாட்டை மறுத்து நான் முறையாக மறுமொழியளித்திருந்தேன். செல்வம் என்கிற பெயரில் எழுதும் நண்பரின் கூற்றையும் எனது கடிதத்தையும் அருகருகே வைத்து முடிவெடுக்கும் பொறுப்பைத் தென்மொழி அன்பர்களிடம் விட்டுவிடுகின்றேன்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள

அ. மார்க்சு.

இயற்றமிழில் பிரிவுகள் உண்டா?

ஆசிரியப் பெருந்தகையீர், வணக்கம்.

*'தென்மொழி'*யில் *'தமிழ்கள்'* பற்றிய செய்திகளைப் படித்ததும் எனக்கு வியப்பு ஏற்பட்டிலது. ஏன் எனில் அறிஞர் பலர் தமக்குப் பழக்கமிலாத துறைகளில் புகுந்து கருத்துகளைத் தாறுமாறாக வெளியிடுதல் இக்காலத்தில் வழக்கமாகிவிட்டது. அவற்றுள் ஒன்று தான் 'தமிழ்கள்' ஆகும்.

'தமிழ்மொழி' ஒன்றே என்பது உலகறிந்த ஒன்று. அது இயல், இசை, கூத்து என்னும் மூன்று பிரிவுகளைக் கொண்டது என்பதை அறியாதார் யார்? இப்பிரிவுகள் இன்று பெருவழக்கில் உள்ள பல மொழிகள் தோன்றுவதற்கு முன்பே ஏற்பட்டவையாகும்.

கூத்திலும் இசையிலும் அடங்காதன எல்லாம் இயலில் அடங்கிவிடும். செந்தமிழ், கொடுந்தமிழ், கொச்சைத் தமிழ், நகரத் தமிழ், நாட்டுப்புறத் தமிழ், மலைவாழ் மக்கள் தமிழ், தாழ்த்தப்பட்டோர் தமிழ் எல்லாமே இயற்றமிழில் அடங்கும். மூன்று அறைகளாக அமைந்த ஒரு வீட்டை வீடுகள் என்று எவரும் கூறார்.

'தமிழ்கள்' போன்றே அறிவியல் தமிழ் அஃதாவது நாலாந் தமிழ் பற்றிச் சிலர் கருத்துமழை பொழிகின்றனர். தமிழ்மொழியில் அறிவியல் கருத்துகள் இல என்று அவர்கள் கருதுகின்றனர் போலும். உலகமே வியக்குமாறு அடிப்படையான அறிவியல் கருத்துகள் கொண்ட மொழி தமிழ் என்பதை அன்னார் ஆய்ந்துணர்ந்திலர். ஆனால் தமிழ் பல்லாண்டுகளாக அடிமைப்பட்ட நிலையில் அவ்வடிப்படையான அறிவியல் கருத்துகள் வளர்ச்சியடைய முடியாத நிலை ஏற்பட்டது. என்றாலும் எந்த அறிவியற் சொல்லையும் உருவாக்கிக் கொள்ளும் செறிவு தமிழ் மொழிக்கு உண்டு, அத்தகு பணியில் அறிஞர் பலரும் முனைந்து செயல்பட்டு வருகின்றனர். அந்த அறிவியல் தமிழும் இயற்றமிழில் அடங்கும்.

கல்வித் துறையில் அறிவியல், வரலாறு, நிலவியல் போன்ற பாடப் பிரிவுகள் ஒவ்வொன்றும் பல்வேறு துணைப் பிரிவுகளாகப் பிரிந்திருப்பதும் மேலும் பிரிய இருப்பதும் கல்வியாளர் அறிந்தவையே. அவை போலத் தமிழையும் பிரித்தால் அம் மொழியின் பிரிவுகள் எண்ணிலடங்கா நிலைக்கு வரும். இக் கருத்து அறியாமையால் ஏற்பட்ட எளிய கருத்தே. எனவே, 'தமிழ்கள்' போலவே 'நாலாந் தமிழும்' ஒதுக்கற்பாலதே.

மு. இறைவிழியன்
புதுச்சேரி.

தூண்டுதலுக்கான சிந்தனை!

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு,

கடந்த 20.6.96 அன்று சென்னை - அண்ணா கலையரங்கத்தில் 'தாழ்த்தப்பட்டோர் விடுதலைக் கூட்டமைப்பு' நடத்திய 'தாழ்த்தப்பட்டோர் கலை விழா'வில் பாவலரேறு பெருஞ்சித்திரனார்ப் பற்றியும், தமிழ்மொழி பற்றியும் அறிஞர் அ.மார்க்சு அவர்கள் பேசிய கருத்துரைகளும், அவற்றுக்குத் திரு.செல்வம் அவர்களின் கண்டன மடலும் தென்மொழியில் வந்தன. பின்னர் மடலுக்கான அ.மார்க்சின் விளக்கவுரையும், தமிழ்மொழி பற்றித் திரு. தமிழநம்பி, திரு. எழில். இளங்கோவன் ஆகியோரின் திறனாய்வுரைகளும் அடுத்தடுத்த தென்மொழி இதழ்களில் இடம்பெற்றதன் வழியாகத், தமிழகக் குமுக மாற்றத்திற்காகப் பலரையும் கூர்மையாகக் சிந்திக்கத் தூண்டியிருப்பதாக எண்ணுகிறேன்.

இன்றைய சாதிய ஏற்றத்தாழ்வான குமுகப்படிநிலை அமைப்பு 'பார்ப்பனியம்' என்று குறிக்கப்படுகிறது. ஆனால், இதற்கு முன்னோடியாகச் சிற்றூர்ப் புறங்களில் 'வெள்ளாளக் கட்டு' என்ற சொல் குறிக்கப் படுவ்வதாகவும் தெரிகிறது. மேலும் தமிழீழத்தில் பார்ப்பன ஆளுமையில்லாத சிவனிய வெள்ளாளர்களின் கருத்தியல் ஆளுமையே மக்கள் அமைப்பை அண்மைக் காலம்வரை கட்டுப் படுத்தியிருந்ததும் நடைமுறை உண்மை.

இன்றைய இந்திய - தமிழகக் குமுக, பொருளியல், அரசியல் சூழலில் சில நிலைகளில் வெள்ளாள ஆளுமையைப் பின்னுக்குத் தள்ளிவிட்டுத்தான், ஆரியப்பார்ப்பனிய ஆளுமையை வெல்ல முடியும். ஏனெனில் அ.மார்க்சு குறிப்பிடுவதைப் போல் பார்ப்பனியம் போலவே வெள்ளாளமும் இடரானதே. குமுகாய மாற்றத்தை அடுத்த கட்டத்திற்கு நகர விடாமல் கருத்தியல் தளத்தில் பல தடைகளை ஏற்படுத்திய வெள்ளாளச் சிந்தனையே, இன்றைய காலகட்டத்தில் பார்ப்பனியமாக வளர்ந்திருக்கிறது. ஆரியமும் பார்ப்பனியமும் இரண்டறக் கலந்து ஆரியப் பார்ப்பனியமாக இந்தியா முழுமையும் ஆளுமை செய்கிறது. சில நிலைகளில் உடன்பட்டும் சில நிலைகளில் முரண்பட்டும் 'வெள்ளாளம்' ஆரியப் பார்ப்பனியத்தோடு, கலந்திருக்கிறது. ஆனால் 'பெருஞ்சித்திரனாரியம்' தமிழியத்திற்குரிய மாந்த நேயச் சிந்தனையோடு - உலக ஒருமைக் கோட்பாட்டோடு - ஓர் இறைப் பேராற்றல் கொள்கையோடு - மெய்யறிவியல் கொள்கையோடு தனிச் சிறப்பாக விளங்குகிறது.

குமுக ஒடுக்கு முறையிலும் பொருளியல் சுரண்டலிலும் வெள்ளாளமும் பார்ப்பனியமும் இணைந்தே இயங்குகின்றன. ஆரியப்

பார்ப்பனிய ஆளுமையை வீழ்த்துவதற்குச் சில வரலாற்றுத் தெளிவையும் திறனையும் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தமிழ்த்தேசிய விடுதலைச் சிந்தனையாளர்களுக்கு அளித்திருப்பதாகவே எண்ணுகிறேன்.

அடுத்து, 'தமிழ்மொழி' பற்றி அ.மார்க்சு அவர்கள், மக்களின் வாழ்வியல் சூழலுக்கேற்ப - வகுப்புப் பகுப்பிற்கேற்ப - பன்முகத் தன்மையையும் ஏற்றுக்கொண்டு 'தமிழ்மொழிகள்' எனச் சொல்வதில் தவறில்லை என்று கூறுவது, தமிழ் மொழியின் - இனத்தின் கட்டமைப்பைச் சிதைப்பதாகும். தமிழினம் சிதைவுக்கும் வீழ்ச்சிக்கும் ஆட்பட்டுப் பல நூறு ஆண்டுகள் கழிந்தும் எழ முடியாமல் அழுத்தப்பட்டுக் கிடப்பதையும், ஆரியப் பார்ப்பனிய மொழியான சமற்கிருதத்தினால், கண்ணையும் காட்சியையும் கருத்தையும் குருடாக்கியிருப்பதையும் பாவலரேறு அவர்கள் உணர்ந்த அளவு அ.மார்க்சு அவர்கள் உணர்ந்து இருக்கவில்லை என்றே எண்ணுகிறேன்.

மறைமலைஅடிகள், தேவநேயப் பாவாணர், வழியில்தான் பாவலரேறு அவர்களும் ஆரியப் பார்ப்பனிய எதிர்ப்பின் அடையாளமாகத் தனித்தமிழ்க் கொள்கையையும், அதை முழுமைப் படுத்துவதற்காகத் தமிழ் நாட்டு விடுதலைக் கொள்கையையும் இணைத்து இயங்கினார்கள்.

கருத்தியல் ஒடுக்குமுறையை முதன்மையாகவும் கருவி ஒடுக்குமுறையை இரண்டாவதாகவும் கொண்டே இங்கு ஆரியப் பார்ப்பனியம் ஆளுமை செய்கிறது. தங்களின் ஆளுமைக்கும் சுரண்டலுக்கும் 'ஆன கருத்துகளை உருவாக்குவதற்கும் அவற்றை வெவ்வேறு வடிவங்களில் பரப்புவதற்கும் மொழி ஓர் ஊடகமாகப் பயன்படுகிறது. 'பிராமணியம்' தன் நச்சுச் சல்லிவேர்களைப் பல நிலைகளில் பரப்பியிருந்தாலும், அதன் ஆணிவேரான சமற்கிருதத்தின் வாயிலாக அனைத்துத் தேசிய இன மொழிகளையும் இணைத்து வைத்திருக்கின்றன. மூட நம்பிக்கையான - அறிவியலுக்கு மாறான கருத்துகளை இதிகாசங்கள், புராணங்கள் வடிவில் எழுத்துகளாகவும் சொற்களாகவும் வெவ்வேறு மொழிகளில் ஊடுருவ விட்டிருக்கின்றன. அனைத்தையும் தன்வயப்படுத்தக் கூடிய தன்மை ஆரியப் பார்ப்பனியத்திற்கு உண்டு. மார்க்சிய இயங்கியலையே, இயங்காவியல் நிலைக்குக் கொண்டு வந்த ஆரியப் பார்ப்பனியத்தை அவ்வளவு எளிதாக எடைபோட மாட்டார் என்றே அ.மார்க்சு அவர்களை நம்புகிறேன். மொழித் தளத்தில் ஆரியத்திற்கு நேர் எதிர் நிலையில் இயங்குவது தமிழ் மொழி மட்டுமே. மற்ற தேசிய இனங்களின் மொழிகள் எல்லாம் ஆரியமயப்படுத்தப் பட்டவையே.

சாதியத்தின் அடித்தளத்தின் மேல் கட்டப்பட்டுள்ள இந்து மதத்தின் துணை கொண்டும், இந்தியாவிலுள்ள பல்வேறு தேசிய இன மக்களைப் பிரித்தும் ஆண்டு கொண்டிருக்கும் ஆரியப் பார்ப்பனிய முதலாளியர் இந்திய ஒருமைப்பாட்டைத் தூக்கிப்பிடிப்பதும் அதில் ஒருங்கிணைவதும் அ.மார்க்சு போன்ற அறிஞர்களுக்குத் தெரியாதா? மேலும், இந்திய ஆரியப் பார்ப்பனிய முதலாளிய ஆளுமைக்கும் சுரண்டலுக்கும் எதிராக ஒடுக்கப்பட்ட சாதிய, மத, இன மக்கள் தங்களுக்குள் சில நிலைகளில் வேறுபாடுகள் இருந்தாலும், முதன்மை முரண்பாட்டில் ஒருங்கிணைய முடியாமல், நுண் அரசியல் (Micro Poltics) என்ற பெயரில் பகுதிசார் தளத்தில் மட்டும் இயங்கினால் ஆரியப் பார்ப்பனியத்தை வீழ்த்த முடியுமா?

க. கண்ணன், கரடிப்பட்டி

எள்ளி நகைக்கும் ஐயாவின் எழுத்துகள்

தமிழில் பிறமொழிச் சொற்களைக் கலந்து பேசுபவர்களை, அவர்கள் எவ்வளவு கற்றவராயினும் மதியேன் - என்றார் மறைமலையடிகளார்.

‘தமிழை வடமொழியினின்று காப்பதே என் வாழ்நாள் குறிக்கோள்’ என்றார் மொழி ஞாயிறு பாவாணர்’ - என் மொழி - என்னினம், என் நாடு நலிகையில் எதனையும் பெரிதென எண்ண மாட்டேன் என்றார் பாவலரேறு ஐயா அவர்கள்.

அந்த மூன்று கொள்கைக்காக - மொழி, இன, நாட்டு விடுதலைக்காகத் தம் மூச்சுள்ளவரை உண்மையுடன் உழைத்தவர் இந்த மண்ணில் ஒருவரே! பாவலரேறு ஒருவர்தாம்! நினைவு மலரினைக் கண்ட பொழுது எண்ணற்ற தமிழ் அன்பர்கள் - அறிஞர்கள் - பாவலர்கள் தங்களின் அரிய எழிலான எண்ணங்களை - கருத்துகளை எடுத்தியம்பியுள்ளனர். என் நினைவு முன்னோக்கிச் சென்றது. ஒரு நாள் தென்மொழி அச்சகத்தில் ஐயா அவர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தேன். அன்புடன் சொன்னார் இப்படி: ‘இந்த மூன்று இதழ்களுக்கும் (தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம்) வேண்டிய எல்லாக் கட்டுரைகளையும், பாடல்களையும் நான் ஒருவனே எண்ணி எழுதி அச்சுப் பொறியேற்றித் திருத்தி, வெட்டி மடித்து, முகவரி எழுதி அனுப்ப வேண்டியுள்ளது -அந்த இரண்டு பெண்மணிகள் துணையுடன், உதவியுடன் அனுப்ப வேண்டியுள்ளது. எப்பொழுதாவது அத்திப் பூத்தாற்போலச் சிலரின் படைப்புகள்’ வரும் என்றார்.

இன்று இ. .த பின் எழுதும் படைப்பாளிகள், அன்று தங்களின் எண்ணங்களை இந்த மொழி, இன, நாட்டின் நன்மையை எண்ணி

எழுதிக் கொண்டிருந்திருந்தால் தென்மொழியின் வளர்ச்சியும் பெருகியிருக்கும். அதன் ஆசிரியரின் உள்ளம் களிப்பில் துள்ளியுமிருக்கும். இன்னொன்றையும் என் உள்ளம் எண்ணிப் பார்க்கின்றது.

'பாவாணர் மறைந்த பின்னை நாமும், நம் அரசும் விழித்துக் கொண்டிருந்தாலும் நம் பன்மொழிப் புலவரை இன்னும் சில காலத்திற்குப் புரந்து பேணி அவர் எச்ச அறிவாட்சியை நீட்டித்திருக்க வழி செய்திருக்கலாம். அதன்வழி அவர் அறிவால் இம் மொழிக்கும், இனத்திற்கும் நாட்டிற்கும் கிடைத்திருக்க வேண்டிய அறிவுக் கருவூலங்களைக் கிடைக்கச் செய்திருக்கலாம். ஆனால் நாம்தாம் போற்றிக் கொள்ள வேண்டிய பெரும்புலமையை மண்ணில் போட்டுப் புதைத்துவிட்டு, அப் புதைமேடையில் நின்று மறைந்து போன புலவர்க்குப் போற்றுதலுரையும் விழா வேடிக்கையும் செய்து நிறைவுறுவோர்கள் ஆயிற்றே! என் செய்வது' என்றார். (தென். மொழி. சு.25, ஓலை.1)

பாவாணர்க்காக அன்று எழுதிய ஐயாவின் அந்த எண்ணங்கள், எழுத்துகள் அவர் மறைந்த பின் இன்று அவை உயிர் பெற்று, அவருக்காகப் பொருத்திக்காட்டி நம் முன் எள்ளி நகையாடுகின்றன என்பதை எண்ணும் பொழுது உண்மையில் மனத்துயரால் வெட்கமுறுகின்றேன். இது ஒரு நாடு! இம் மக்களும் தமிழர்கள் என்ன செய்வது!

அருள்மணி, வெங்காலூர்

திருக்குறள் நாவை சிவம்

52 - ஆவது பிறந்த நாள் நன்கொடை

தென்மொழியின் நெடுநாள் அன்பரும் செயல் வீரருமான புலவர் திருக்குறள் நாவை சிவம் .அவர்கள் தமது ஐம்பத்திரண்டாவது பிறந்த நாள் நினைவாகத் தென்மொழி நிலைப்பாட்டுத் தொகையாக உருவா ஐந்நூறும், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அறக்கட்டளைத் தொகையாக உருவா ஐந்நூறும் ஆக உருவா ஆயிரம் (1000/-) நன்கொடை வழங்கியுள்ளார்கள். அவர்க்கு நன்றிதெரிவித்துக் கொள்வதோடு அவர் நீடுவாழ வாழ்த்துகிறோம்.

- ஆசிரியர்

முனைவர் கடவூர் மணிமாறன் அவர்களின்

'பாரதிதாசன், பெருஞ்சித்திரனார் பாடல்கள்–ஓர் ஒப்பாய்வு'

நூல் வெளியீட்டு விழா!

முனைவர் கடவூர் மணிமாறன் அவர்களின் முனைவர்பட்ட ஆய்வு நூலாகிய 'பாரதிதாசன் - பெருஞ்சித்திரனார் பாடல்கள் ஓர் ஒப்பாய்வு' என்னும் நூல் வெளியீட்டுவிழா, தி.பி. ஆண்டு 2027, துலைத் திங்கள், 10 ஆம் நாள் காரிக்கிழமை (26.10.96) மாலை 6.00 மணி அளவில் திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்க அரங்கில் நடைபெற்றது.

குளித்தலைத் தமிழ்க் கா.சு. இலக்கியக் குழு நிறுவனர் தமிழ்ச்சுடர் மீ.சு. இளமுருகு பொற்செல்வி விழாத் தலைமையேற்க, நல்லாசிரியர் து. வெள்ளமுத்து வரவேற்புரையாற்றினார்.

பாவலரேறு அவர்களின் துணைவியார் திருவாட்டி தாமரை பெருஞ்சித்திரனார் அவர்களும் திருவாட்டி பொற்செல்வி இளமுருகு அவர்களும் முன்னிலை ஏற்றனர்.

தமிழகக் கல்வி அமைச்சர், மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகனார் அவர்கள் நூலை வெளியிட்டு நூலின் சிறப்பினையும், பாரதிதாசன், பெருஞ்சித்திரனார் ஆகியோரின் சிறப்பியல்புகளையும் விளக்கிப் பேருரை ஆற்றினார்கள்.

நூலின் முதற்படியைத் திருச்சி, தொழிலக உரிமையாளர் திரு. வீ.கே.என். கண்ணப்பன் அவர்கள் உருபா. 2000/- வழங்கிப் பெற்றுக் கொண்டார்கள்.

முனைவர்பட்ட ஆய்வு நெறியாளர், பேராசிரியர் கு.ப.கணேசன் முனைவர் கன்னல், சொல்வேந்தர் செல்வேந்திரன், திரு. அ.சிவராமன், திரு. ச.திருநாவுக்கரசு ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

'நீதி கேட்ட நெடிய பயணம்' என்னும் பா நூலை எழுதிய பாவலர்கள், . து. வெள்ளமுத்து, புலவர் அருணா பொன்னுசாமி, புலவர். ப.தமிழ்மணி, முனைவர் கடவூர் மணிமாறன், முனைவர் கருவூர் கன்னல் ஆகிய ஐவருக்கும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பொன்னாடை அணிவித்துச் சிறப்பித்தார்கள்.

நூலாசிரியர் முனைவர் கடவூர் மணிமாறன் ஏற்புரை வழங்கினார். புலவர் குறளன்பன் நன்றி நவில விழா இனிதே நடந்தேறியது.

விழாவில் தென்மொழி அன்பர்கள் திருவாட்டி இறை. பொற்கொடி, குழந்தை ஈகவரசன், நடுவை. மு.வ. பரமசிவம், திருக்குறள் நாவை சிவம், பாவலர் அன்பு ஆறுமுகம், தென்மொழி பழனியப்பனார், பொத்தனூர் கதிரவன், குறளன்பன், ஆ.வே. இராமசாமி, தி. செங்குட்டுவன், பி.குமாரசாமி போன்ற பலரும் திரளாகக் கலந்து கொண்டு நூல் வெளியீட்டு விழாவைச் சிறப்பித்தனர்.

நிகழ்ச்சியில் கல்வி அமைச்சர் பேரா. அன்பழகனார் பேசுகையில்...

'கழக(சங்க)த் தமிழுக்கு ஆக்கம் செய்தவர் பாவலரேறு பெருஞ்சித்திரனார். தனித்தமிழ் ஆக்கத்துக்குரிய நடையில் தமிழின் சொல்வளம் முழுதும் காட்டிய இவர் மொழிக்கு முதன்மை தந்தவர்.

நல்ல தமிழ் - தனித்தமிழ் எழுத வேண்டும் என்று விரும்பியதோடு எல்லோரும் அதனைப் பின்பற்ற வேண்டும் என்று விரும்பியவர் பெருஞ்சித்திரனார்.

பெரியாரின் கொள்கை பாரதிதாசனை ஆட்கொண்டது. பெருஞ்சித்திரனாரையும் ஆட்கொண்டது. நடையில் உறுதி, அழுத்தம் உடையவர் பெருஞ்சித்திரனார். பாரதிதாசனும் பெருஞ்சித்திரனாரும் தமிழ் மரபில் தம்மை ஊன்றியவர்கள். அழுத்தமான கடவுள் பற்றுக் கொண்டிருந்தவர் பெருஞ்சித்திரனார்.

பாரதிதாசன் பாடல்கள் மக்களைத்தட்டி எழுப்பக் கூடியவை. பெருஞ்சித்திரனார் பாடல்கள் கழக(சங்க) இலக்கியத்தோடு ஒப்பு நோக்கத்தக்கவை.

பாரதிதாசன் நடை, திரு.வி.க. நடைக்கும் பாரதி நடைக்கும் இடையில் இருக்கும் நடையாகும். பெருஞ்சித்திரனாரின் நடை, திரு.வி.க. நடைக்கும் மறைமலையடிகள் நடைக்கும் இடையில் இருக்கும் நடையாகும்.

பாரதிதாசனும் பெருஞ்சித்திரனாரும் தமிழ் வளர்த்த செம்மல்கள்; தூண்கள் ஆவார்கள். பாரதிதாசன் முன்னரே புரட்சிப் பாவலராகத் தமிழ் இலக்கிய உலகில் அறிமுகம் ஆகிவிட்டமையால், புரட்சிப் பாவலர் ஆகும் வாய்ப்பு பாவலரேறு அவர்கட்கு அமையவில்லை. என்றாலும் தமிழ்மொழி, தமிழினம், தமிழ்நாடு இவற்றில் அழுத்திய சிந்தனைப் போக்கைக் கொண்டிருந்தவர் பெருஞ்சித்திரனார்.

தொடர் - 3

வடமொழி எழுத்துகள்!

க. குழந்தைவேலன்

இன்று அறிவியல் வளர்ச்சியில் உலகம் விரைந்தோடிக் கொண்டுள்ளது. நாளும் நாளும் அறிவியல் கண்டுபிடிப்புகள் எண்ணற்று எழுகின்றன. அவற்றைக் குறிக்கப் பன்னூறு சொற்கள் தோன்றி, வழங்கப்படுகின்றன. அந்த உலகோடு தமிழுலகும் விரைந்து முன்னேற வேண்டும். அதற்காக இவ்வெழுத்துகளைப் பயன்படுத்த வேண்டும் என்பது ஒரு கருதுகோள். இக் கருதுகோளுடையார் இருவகைப்படுவர். (அ) அறிவியற் கலைச் சொற்களையும், பெயர்களையும் அப்படி அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பர் ஒரு சாரார். (ஆ) மற்றொரு சாரார் அச்சொற்களின் தோற்றக் காரணங்கள் அறிந்து, தமிழின் வேர்ச் சொற்களைக் கொண்டு புதுச்சொற்களை உருவாக்குதல் வேண்டும் என்பர். இருசார் கூற்றுக்களையும் குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள் மிகை நாடி மிக்க கொளலே அறிவுடைமை.

'அறிவியற் சொற்களுக்கான வேர்ச்சொற்களைத் தேடி மொழி பெயர்ப்புகள் செய்து கொண்டிருந்தால் அறிவியல் விரைவுக்கு ஈடு கொடுக்க இயலாமல் மிகவும் பின்தங்கிவிடுவோம்' என்பது, அறிவியற் சொற்களை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பார் கூறும் தலையாய கரணியம். இக்கூற்று சிந்திக்கத் தக்கதே. 'தொடக்கத்தில் உடனுக்குடன் சொல்லாக்கங்களைச் செய்தலும் அதனை புழக்கத்திற்குக் கொண்டு வருவதும் சற்று இடர்ப்பாடானதே. சரியான சொல்லாக்கம் கிடைக்கும்வரை அதனை அப்படியே ஆள்வதில் தவறில்லை. உடனடியான தேவைக்காக அதனைப் பயன்படுத்திக் கொண்டு புதுச் சொல்லாக்கம் செய்தல் வேண்டும். அவ்வாறேனும் பிறமொழிச் சொற்களைப் பயன்டுத்த இவ்வெழுத்துகள் தேவை' என்பர். உடனடியான தேவைகட்காகப் பயன்படுத்துவதும்கூட மொழியைச் சீர்குலைக்கும் என்பது வெளிப்படை. தமிழிடை உள்ள எழுத்துகளைக் கொண்டே ஈடு செய்வதே முறையும் மொழிக்காப்பும் ஆகும்.

மற்றொரு நோக்கமான தமிழ் வேர்களில் இருந்து சொற்களைப் படைத்துக் கொள்ளல் வேண்டும் என்ற நோக்கு நன்னோக்கு, தூய நோக்கு. எந்த ஓர் இனத்தின் மொழியும் தன் வேரில் இருந்து சொற்களை மென்மேல் பெருக்கலே அதன் தனித் தன்மையையும், மொழியின் அழியாத் தன்மையையும் நிலைபேறுடையதாகச் செய்யும். உலகில் தேசிய இனப்பற்றுள்ள நாட்டறிஞர்களும் அந்நாட்டை மேனிலைப் படுத்தவிழையும் நன்னோக்குள்ள ஆளுந்தலைவர்களும்

இக்கருத்தை அரண் செய்து அதற்காகப் பாடுபட்டு வருகின்றனர். அந்த அளவுக்கு இன்று நமது நாடு உள்ளதா என எண்ணிப்பார்க்கின் சிறிது தொய்வு ஏற்படத்தான் செய்கிறது. தொய்வகற்றி வீறுகொண்டு எழல் வேண்டும். உணர்வோடு கலந்த அறிவு வேண்டும். நமக்கு வெற்றி கிட்டும் என்பதற்குப் பல எடுத்துக்காட்டுகள் உள்ளன.

தமிழ் மொழியில் அறிவியல் நூல்கள் எழுதத் தொடங்கிய போது எழுதுவோர் தமிழில் பற்று அல்லது புலமை இல்லாதவராயும் வடமொழி ஆர்வலராயும் இருந்தமையோடு வடசொல், தென்சொல் வேற்றுமை அறியாராயும் இருந்தமையால் பெரும்பான்மையும் சமற்கிருதச் சொற்களையே பயன்படுத்தினர். தூய தமிழ் இயக்க எழுச்சிகளாலும், தமிழ் வேண்டும் என்ற ஆட்சியின் தோற்றத்தாலும் அவ்வறிவியல் நூல்கள் பெரும்பாலும் தமிழாயின. புதியவாக எழுதப்படும் அறிவியல் நூல்கள் தமிழில் கலைச் சொற்களைப் பயன்படுத்தியும் கலைச் சொற்பட்டிகளைப் பிற்சேர்க்கையாகச் சேர்த்தும் வெளியிடப்பட்டன. அறிவியல், பொறியியல் மாணவ மன்றங்களும் பிறவும் கலைச்சொல் அகர முதலிகளை வெளியிட்டன. அரசின் தமிழ் ஆட்சிமொழித் தொடக்கமிடுக்கு மங்கிப் போனமையால் மீண்டும் பழைய நிலைமை திரும்புகிறது என்பதை அறிஞர் பெருமக்கள் சிந்தித்தல் வேண்டும். எனவே முயன்றால் முடியாததில்லை. நமது மொழிக்கும் நாட்டுக்கும், இனத்திற்கும் செப்பம் வேண்டின், நிலைபேறு வேண்டின் தன் சொற்களே படைத்தல் வேண்டும். இயலும். அவ்வாறு படைப்பின் இவ்வெழுத்துகட்கு வேலை ஏது. ஆள்வினை இன்மைப் பழி எய்தக் கூடாது.

பற்பல சிந்தனைக்குப் பின்பும் இவ்வெழுத்துகளைப் பயன்படுத்த வேண்டும் என்ற மன அரிப்பு இருக்குமாயின் கெடுவோம். நம் பண்டை இலக்கண, மொழி நூல் அறிஞர்கள் இட்ட மரபுக் கோட்டை மீறினால் அழிவுகள் திண்ணம். தொல்காப்பியர் ‘வடசொற்களவி வடவெழுத் தொரீஇ..’ என்றும் ‘இயற்சொல், திரிசொல், திசைச் சொல், வடசொல்... செய்யுள் ஈட்டச் சொல்லே’ என்றும் கூறிய நூற்பாக்களில் வடசொல் என்பதற்குத் தத்தம் காலத்தில் வழங்கிய சமற்கிருதச் சொல்லே என அறியாது கொண்ட சிறு நெகிழ்ச்சியால் அதையே காரணங்காட்டித் தமிழ் எழுத்துகளால் பல வடசொற்களைத் திணித்தும் கலந்தும் மணிப்பவளமாய் பேயாட்ட மாடியதையும் அதற்குப் பின் வந்தோர் அம்மொழிக்கும், எழுத்துக்கும் தமிழோடு இலக்கணங் கண்டதையும் அறிவோம்.

இவை எழுத்து, மொழி வரலாற்றைச் செவ்விதின் உணராது களையிடைத் தோன்றிய பயிர் போலத் தமிழைப் பாழ்படுத்திவிட்டன. அதனால் பல கால், பல இயக்கங்கள் தோன்றிக் களைகட்டும், இன்னும்

அக்களைகள் நீங்கியபாடில்லை. போதாதற்குப் புதுக்களைகளும் அச்சுறுத்துவதைத் தமிழுணர்வார் நன்குணர்வர். அந்நிலைக்கு மீண்டும் தமிழைத் தள்ளலாமோ? வேண்டா என்று தமிழ் நலங்காப்பார் எவரும் தமிழானியன்ற சொற்களையே பேணுவர். தவிர்க்கவியலாச் சூழலில் வேற்றுச் சொல்லால் எழுத நேரினும் தமிழ் எழுத்தானே எழுதிப் பேணுவர் என்பது திண்ணம்.

இன்று நமக்கு இன்றியமையாது தேவைப்படுவது எழுத்துத் திருத்தமோ அல்லது எழுத்துக் கடன் பேறோ அல்ல. நமது அறிவியல் வளர்ச்சிக்கு அவை எவ்வகையினும் தடை இல்லை. நாமும், நமது எண்ணங்களுமே நமக்குத் தடை. நம்மைவிடப் பன்மடங்கு எழுத்துச் சிக்கலுள்ள சப்பானும் சீனாவும் கொரியாவும் உலகில் உயர்ந்து நிற்பதற்கு அவர்களது (இடியாப்பம் போன்ற சிக்கலுள்ள) எழுத்துச் சிக்கல் தடையாகவா இருந்தது? இல்லையே! அவர்கள் உள்ளம் முன்னேறத் துடிக்கின்றது. அந்தத் துடிப்பைச் செயலாக்குகின்றனர். செயல் அவர்களை மேலேற்றுகிறது. அறிவியலில், தொழில் நுட்பத்தில், மின்னியலில், வணிகத்தில் உலகில் தன்னினும் வலிய நாடுகளை விஞ்சுகிறது சப்பான். அது தனது வளர்ச்சிக்கு மொழியும் எழுத்தும் தடையாக நிற்கின்றன என்று சீர்திருத்தம் செய்துகொண்டு நிற்கவில்லை. நமக்குக் கோளாறு எழுத்தில் இல்லை, மனத்தில் (எண்ணத்தில்), செயலில், தட்டிக் கழித்தலில், தன் முனைப்பின்மைக்குக் காரணம் தேடலில். ஆடத் தெரியாதவள் மேடை கோணல் என்பதுபோல் நம் கையாலாகாத தன்மைக்கு இஃது ஒரு சாக்கு அவ்வளவே.

அண்மையில் கணிப்பொறி வல்லுநர் ஒருவர் தமது சப்பானியச் செலவுப் பட்டறிவு பற்றிக் கூறியவற்றுள் ஒரு பகுதியை எடுத்துக் காட்டி முடித்தல் நலம் பயக்கும்.

"சுற்றுலாவில் அதிகப் படியாகச் செலவழிப்பவர்கள் சப்பானியர்கள் தாம். ஆனால் ஓர் எழுத்துகூட ஆங்கிலம் தெரியாது. ஆங்கிலத்தை வைத்துக்கொண்டு சப்பானில் பிழைக்க முடியாது. பொது கழிப்பறைக் கதவுகளில்கூட ஆண் எது பெண் எது என்று தெரியவில்லை. சப்பானிய மொழியில்தான் எழுதி உள்ளார்கள். எல்லா எழுத்தும் பூச்சி பூச்சியாக! இந்த எழுத்துகளை வைத்துக்கொண்டு எப்படித்தான் படித்து வெற்றியடைகிறார்களோ என்று வியப்பாக இருக்கும். ஒவ்வோர் எழுத்தும் புனைவுசெய்த திருப்பதிப் பெருமாள் போல இருக்கிறது.

சப்பானிய மொழியின் பட எழுத்துகள் 'ஐடியோகிராப்' என்று சொல்கிறார்கள். சீனா, கொரியா போன்ற அனைத்துக் கிழக்காசிய மொழிகள் எல்லாமே சீனத்துக் கான்சி என்ற எழுத்துகளிலிருந்து வந்தவை...... 'கான்சி ஒவ்வோர் எழுத்தும் ஒரு பொருளை, ஒரு முழுச்

சொல்லை குறிக்கின்றது. எகுபதிய ஈரோக்ளரிப்சு போல் இவை மரம், கதிரவன், வீடு... இப்படி எளிய சித்திரங்களிலிருந்து இவ்வெழுத்துகள் புறப்பட்டன. தமிழ் போன்ற மொழிகளில் எழுத்துகளுக்குத் தனி பொருள் கிடையாது. ஆனால் கான்சி எழுத்துகள் அனைத்துமே சொற்கள். நாளடைவில் இந்த எளிய படங்கள் கொஞ்சம் கொஞ்சமாகக் கலவைச்சாந்து சேர்த்துக்கொண்டு சிக்கலாயின. குழப்பம் போதாதென்று சப்பானியர்கள் 'கான்சி எழுத்து புதிய செய்திகளுக்குத் தடையாக இருக்கிறது'. என்று பட எழுத்துகளுடன் சில ஓவியங்களையும் சேர்த்துக் கொண்டார்கள். அவற்றை 'இராகானா காட்டாகானா' என்று சொல்கிறார்கள். புதிய சப்பானிய மொழிப் பட எழுத்துகள், இருவகை ஒலியன்கள் என்று கலந்து இருக்கின்றன. இவற்றை மூன்று வகையாக எழுதுகிறார்கள். மேலும் சில சமயம் இடமிருந்து வலமாகவும் எழுதுகிறார்கள். கடைசிப் பக்கத்திலிருந்து படிக்கிறார்கள்.

இத்தனைக் குழப்பங்கள் இருந்தும் எத்தனை முன்னேற்றம். 'தமிழிலேயே கற்றுக்கொண்டால் நாம் பின் தங்கிவிடுவோம் என்று இனி யாராவது சொன்னால், அந்த ஆளை உதையுங்கள்"

தமிழ் மொழியில் எழுதினால் நாம் பின் தங்கி விடுவோம் என்பார்க்கும் நாம் இதைத்தவிர வேறு என்சொல்ல? இதற்கு மேலும் நமக்கு மேற் கண்ட எழுத்துகள் தேவை என்பார்க்கு நாம் என்ன விடையிறுக்க?

பாவலரேறு பெருஞ்சித்திரனார் நினைவு மலர்



o தமிழறிஞர்கள், இனநல வுணர்வாளர்கள், நாட்டு விடுதலைப் போராளிகள் முதலான பலதுறைப் பெருமக்களிடமும் இருக்க வேண்டிய நலமிகு கருத்துக் களஞ்சியம்!

o இளைய தலைமுறையினர் ஒவ்வொருவரும் கட்டாயங் கைக்கொள்ள வேண்டிய அரும்பொருட் பெட்டகம்!

விலை உரு. 60.
பதிவஞ்சலில் பெற உரு. 75

'தென்மொழி நூல் வெளியீட்டு - விற்பனையகம்',
சென்னை - 600 005.

பார்ப்பனியம்

(தமிழகத்தின் - இன்றைய அரசியல் களத்தில் 'பார்ப்பனியம்' என்பது எதுவென்பது வரையறுத்த அரசியலாக இல்லை. ஒவ்வொரு அமைப்பும், தனிமாந்தர் ஒவ்வொருவரும் தாம் கொண்டிருக்கிற அரசியலின் படி பார்ப்பனியத்தை வகை செய்து விளங்கிக் கொள்ளுகின்றனர்.

தமிழகக் குமுகப் புரட்சிக்குப் 'பார்ப்பனியம்' பற்றிய கருத்து விரிவைத் தெரிந்து தெளிவடைவது ஓர் இன்றியமையா முயற்சியாகும்.

எனவே அம் முயற்சிக்கான ஆய்வுக்காக இதுவரை இது குறித்துப் பலரும் முன் வைத்திருக்கிற செய்தி தொடர்ந்து தென்மொழியில் வெளிவரும். அவ்வொவ்வொன்றின் கருத்துப் பற்றியும், அதன் மீதான திறனாய்வையும் - அதை எப்படி வகைப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும் என்பது குறித்தும் 'தென்மொழி' - அனைவரின் கருத்துகளையும் எதிர்நோக்குகிறது. தமிழர்தம் விடுதலைப் பாதைக்கு உரமிடுவதாய் அது அமையட்டும். - ஆசிரியர்)

தமிழகத்தில் நிலவும் பார்ப்பனியத்துக்கு என்றுமே பார்ப்பனர்கள் மட்டும் பொறுப்பல்லர். அனைத்து மட்டத்து மக்களும் ஏற்றுக் கொண்ட, அதாவது அனைத்து மக்களாலும் துடைத்தெறிய முடியாத வகையில் உள்வலிமை கொண்ட ஒரு நிறுவனமே பார்ப்பனியம். அப் பார்ப்பனியத்தின் உச்சியில் அதன் மணிமுடியாகத் திகழ்பவர் பார்ப்பனச் சாதியினர். இந்தப் பார்ப்பனியத்துக்கென்று சில சிறப்பியல்புகள், பண்பாட்டுக் கூறுகள் உண்டு. அப் பண்பாட்டுக் கூறுகள் கேள்விக்குட்படாது நிலைபெற்று நிற்பது, பார்ப்பனியம் அழியாமல் நிலைத்து நிற்பதற்கான மிக முகாமையான காரணமாகும். அவை:

1. புலால் மறுத்தல் - உண்மையில் இது போலியானது. பாலை உண்ணும் எவரும் புலால் மறுத்தவராக முடியாது. இந்த உண்மை 1930களிலேயே இராசகோபால பாரதி என்பவர் எழுதிய 'சர்வ வருண சமத்துவ விளக்கம்' என்ற நூலில் விளக்கப்பட்டு அந்நூல் பெரியாருக்கு அனுப்பப்பட்டுக் 'குடியரசு' இதழில் நூல் பற்றிய குறிப்பும் வந்துள்ளது.

2. பெண்ணடிமை - கீழ்ச்சாதி மக்களிடையில் நிலவும் மணவிலக்குரிமை, மறுமணவுரிமை முதலியவற்றை மறுத்தல்.

3. உழைப்பை வெறுத்தல் - இதற்கு உறுதுணையாக மறுபிறவிக் கோட்பாட்டையும், பிறவியைத் தவிர்த்தல் என்ற காரணம் காட்டி வினையின்மைக் கோட்பாட்டையும் உயர்த்திப் பிடித்தல்.

4. நோன்புகள் கடைப்பிடித்தல் - இதற்குத் தேவையான ஓய்வும் அதனடிப்படையான செல்வச் செழிப்பும்.

5. பூணூல் அணிதல் பூணூல் அணிவதற்குப் பார்ப்பனரல்லாதோர் இரு தடவைகள் பெருஞ்செலவில் சடங்குகள் இயற்ற வேண்டும். நாளும் இருமுறை மந்திரம் ஓத வேண்டும்.

மறைகளை மனப்பாடம் செய்ய வேண்டும். இவற்றுக்குத் தேவையான பொருளியல் வலிமையும் ஓய்வும் வேண்டும். ஐந்தொழிற் கொல்லர்களில் இன்று பெரும்பாலோர் பூணூலணிந்தாலும் பணம் படைத்த பொற்கொல்லர்களில் சிலரும் சிற்பிகளில் பணம்படைத்தோரும் புலாலுண்ணாமை, மறைகற்றல் முதலியவற்றைக் கடைபிடிப்பதாகப் பெருமை பேச முடிகிறது. விருதுநகர், சிவகாசி ஊர்களைச் சேர்ந்த நாடார்களில் சிலரும் இப்'பெருமை'க்கு உரியவர்கள். செட்டியார்கள் போன்று வேறு பல சாதியினரில் சிலரும் இப்போலிப் பெருமையைப் பேணுகின்றனர்.

6. சிறு தெய்வங்களைப் புறக்கணித்துப் பார்ப்பனர் பூசை செய்யும் கோயில்களில் பணஞ் செலுத்திச் சமற்கிருதப் போற்றி (அருச்சனை) செய்தல். அல்லது சிறு தெய்வங்களுக்கே பார்ப்பன வழிபாட்டு முறையைப் புகுத்துதல்.

7. பார்ப்பனரை வைத்துத் தீவலம் வந்து அம்மி மிதித்து அருந்ததி காட்டித் திருமணம் செய்தல்.

8. பார்ப்பனருக்குக் காணிக்கை செலுத்தி இறந்து போன பெற்றோருக்குத் தவசம் கொடுத்தல்.

9. மேலேயுள்ள சாதியினரையும் போரில் வெற்றி பெற்று ஆட்சியமைத்தவர்களையும் அண்டி, பொதுவில் ஆட்சியாளர்களுக்கு அடிபணிந்து நடப்பதுடன் அவர்களைப் போற்றிப் புகழ்தல். கீழேயுள்ள சாதியினரையும் பிறரையும் இழிவாக நடத்துதல்.

10. ஆட்சியாளரின் அதிகாரத்துக்கும் நடைமுறையிலிருக்கும் வழக்குகளுக்கும் ஆதரவாக இருத்தல்.

11. வழக்கிலிருக்கும் இலக்கியங்கள், இலக்கணங்கள், சமயக் கோட்பாடுகள், மெய்யியல்கள் ஆகியவற்றுக்கு எதிராகப் பேசுவதைத் தவிர்த்தல். அவ்வாறு பேச வேண்டி வந்தால் முன்னுள்ள நூல்களுக்குத் தம் கருத்துக்கேற்பப் புது விளக்கங்களை மட்டும் தருதல்.

12. தாய் மொழியைப் பழித்தல், இழித்தல் என்றிவ்வாறு.

இவைதாம் பார்ப்பனியம் என்பதன் முகாமையான கூறுகள். இக் கூறுகளுக்கு எதிராக அவற்றைத் தகர்த்தெறிவனவாக எந்தச் சீர்திருத்தரின் செயற்பாடுகளும் அமையவில்லை. இராமலிங்க அடிகளார், தாயுமானவர் போன்றோரின் இயக்கங்கள் எளிய மக்களிடையில் வேர் கொள்ளாததற்கு, இந்தப் பார்ப்பனியப் பண்பாடுகளில் சிலவற்றை, குறிப்பாகப் புலாலுண்ணாமை, பெண்ணடிமை முதலியவற்றைத் தூக்கிப்பிடித்ததே காரணம். அப்படியும் அவர்கள் இருவரும் ஐயத்திற்கிடமான வகையில் மரணமடைந்தனர். பார்ப்பன எதிர்ப்பு,

பூணூல் மறுப்பு, பெண்ணுரிமைகள் என்று போராடிய பார்ப்பனரான பசவர்கூடப் புலால் மறுப்பு என்ற பார்ப்பனியக் கூறைத் தூக்கிப் பிடித்ததால் அவரது இலிங்காயத்து எனப்படும் வீரச்சிவனியமும் மக்களைக் கவ்விப் பிடிக்கவில்லை.

பணக்காரரே கைக்கொள்ளத்தக்க இந்தப் பண்பாட்டுக் கூறுகள் சாதி உயர்வுக்கு அடையாளமாகக் கொள்ளப்பட்டிருப்பதால் ஒவ்வொரு சாதியினரும் பொருளியலில் உயரும் போது அல்லது கீழ்ச்சாதிகளால் நெருக்கப்படும் போது மேற்கூறிய பார்ப்பனப் பண்பாடாகிய பார்ப்பனியத்தைக் கைக்கொள்ளுகிறார் அல்லது போற்றுகிறார்.

எனவே இந்தப் பண்பாட்டுக் கூறுகளை அலசி ஆய்ந்து கீழ்ச்சாதிகள் எனப்படுவோருக்குரிய பண்பாட்டுக் கூறுகளிலுள்ள மாந்தத் தன்மையையும் முற்போக்குத் தன்மையையும் எடுத்து வைத்து அவற்றிலும் கீழேயுள்ள சாதிகளை இழித்தல் போன்றவற்றைக் கடிந்துரைப்பதன் மூலம்தான் பார்ப்பனியத்துக்கு முடிவுகட்ட முடியும். இந்த அறிவியல் அணுகலை விடுத்து மொட்டையாகப் பார்ப்பனியத்துக்கு எதிரான சொற்களை [illegible]ும் கூறுவது முடிவில் பார்ப்பனரை மட்டும் எதிர்த்த செயலாகவே [illegible]யும். அதுதான் இன்று நடைபெறுகிறது. பார்ப்பனியத்தை எதிர்ப்பதாகப் பறைசாற்றும் எவரும் பார்ப்பன எதிர்ப்பைத் தாண்டி எதையும் [illegible]ய்யவில்லை.

பார்ப்பனியம் என்று படித்தவர்களிடையில் நிலவும் இச்சொல் வெள்ளையரால் உருவாக்கப் பட்டது. இச் சொல்லுக்கு இணையான வெள்ளாளக்கட்டு என்ற சொல் நாட்டுப் புறங்களில் நிலவுகிறது. இது தான் பார்ப்பனியம் எனப்படும் கருத்துருவின் உண்மையான பொருளைப் புலப்படுத்துவதாகும். அத்துடன் சமணத்திலிருந்து சிவனியத்துக்கு மாறிய திருநாவுக்கரசரைப் பின்பற்றிய வெள்ளாளர்களிடமிருந்து காலத்தின் கட்டாயத்தால் பார்ப்பனர்கள் கடைப்பிடித்தவற்றில் புலாலுண்ணாமை முகாமையானதாகும். எனவே பார்ப்பனியம் எனும் வெள்ளாளக்கட்டின் தன்மைகளை மக்கள்முன் எடுத்து வைக்க வேண்டியது நம் கடனாகிறது.

இந்த வகையில் மண்ணிலிருந்து அயற்பட்டோராகிய அரசூழியம் பெற்ற கீழ்ச்சாதி மக்கள் வெள்ளாளக்கட்டினுள் எளிதாக நுழைந்து விடுகின்றனர். இவர்களிடையில் வெள்ளாளக் கட்டுப் பண்பாட்டுக் கூறுகளின் கீழ்மையை விளக்கி கூற வேண்டும். எதிர்த்துப் போராட வேண்டும். எடுத்துக் காட்டாக மரக்கறி (சைவ) உணவகம் என்றிருக்கும் உணவுவிடுதிப் பலகைகளை அகற்றப் போராடலாம்.

குமரிமைந்தன்

(திராவிடத்தால் வீழ்ந்தோமா?- சில குறிப்புகள் -நூலிலிருந்து)

செய்திகள்

(பாவலரேறு ஐயா அவர்கள் உடல் நலங் குன்றி மருத்துவ மனையில் இருந்த நிலையில் ஐயா அவர்கள் முன்னர்ப் பங்கேற்ற நிகழ்ச்சிகள் தொடர்பான செய்திகள் பல தென்மொழியில் வெளிவராமல் இருந்தன. கையெழுத்துப் படிகள் கோப்பில் ஐயா அவர்கள் எழிதிவைத்திருந்தனவும் விடுபட்டனவுமான அச் செய்திகள் ஈண்டு இடம்பெறுகின்றன. - ஆசிரியர்.)

வளர்தமிழ்ப் பேரவைத் தொடக்கவிழா! மறைமலையடிகள் பிறந்தநாள் விழா!

திண்டுக்கல்லில் கடந்த தி.பி. 2025, கடகம் 28 (13/8/94) காரிக் கிழமை அன்று மாலை 6.00 மணிக்குத் தூய மரியன்னை தொடக்கப் பள்ளியில் திண்டுக்கல் - வளர்தமிழ்ப் பேரவைத் தொடக்க விழா நிகழ்ச்சியும், மறைமலையடிகள் பிறந்த நாள் விழா நிகழ்ச்சியும் சிறப்புற நடைபெற்றது. நிகழ்ச்சியின் போது பாவலரேறு ஐயா அவர்கள் பேருரையாற்றினார்கள். திருவாளர்கள் மரிவளன், முனைவர் கடவூர் மணிமாறன், திண்டுக்கல் தமிழ்ச் சங்கம் கோ. சுந்தரராசன் ஆகியோரும் மற்றும் பலரும் வாழ்த்துரை வழங்கினார்கள்.

முதலமைச்சர் வீட்டு முன் ஆர்ப்பாட்டம்!

சென்னையில் கடந்த 27.8.94 அன்று தலைநகர்த் தமிழ்ச் சங்கச் சார்பில் - அப்போதைய முதலமைச்சர் செயலலிதா வீட்டுமுன்-பள்ளிகளில் ஆங்கிலப் பேச்சுப் பயிற்சிக்குக் கட்டளை இல்லை என்னும் அரசுச் செய்திக்கு மறுப்புத் தெரிவிக்கும் வகையில் ஆர்ப்பாட்ட நிகழ்ச்சி நடந்தது. நிகழ்ச்சியில் உலகத் தமிழின முன்னேற்றக் கழக முதல்வர் பாவலரேறு ஐயா அவர்கள் கலந்து கொண்டார்கள். தலைநகர்த் தமிழ்ச் சங்கம், தமிழாசிரியர் கழகம், மற்றும் பல இயக்கங்களும் கலந்து கொண்டன. நிகழ்ச்சியின் போது ஐயா அவர்களும் மற்றமுள்ள அனைவரும் தளைப்படுத்தப் பெற்றனர். பின்பு மாலை விடுவிக்கப் பெற்றனர்.

கா. பன்னீர்ச் செல்வம் - மா. மாரியம்மாள் வாழ்க!

தி.பி. 2025 மடங்கல் திங்கள் 24 ஆம் நாள் போரூர், தொடர்வண்டிக் குடியிருப்பில் போரூர். கெ. கணேசன் - செயா இணையரின் அன்பு மகன் செல்வன் க. பன்னீர்ச்செல்வத்திற்கும், பசுமாத்தூர் கு. மாசிலாமணி - சரோசா இணையரின் அருமை மகள் செல்வி மா. மாரியம்மாளுக்கும், உலகத் தமிழின முன்னேற்றக் கழக நிறுவனர் பாவலரேறு ஐயா அவர்களின் சீரிய தலைமையில் மணவிழா நிகழ்ச்சி சிறப்பாக நடந்தது. நிகழ்ச்சியின் போது, திருவாளர்கள் மா. செ. தமிழ்மணி, பொன். ஆனந்தராசு, எம்.கே.ஏ. குமார் ஆகியோரும் மற்றும் பலரும் வாழ்த்துரை

வழங்கினார்கள். க. கிருட்டிணமூர்த்தி அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்ச்சி நிறைவு பெற்றது.

த. நெடுஞ்சோழன் - செ. தேன்மொழி வாழ்க!

திபி. 2025 மடங்கல் திங்கள் 31 அன்று (16.9.94) வேலூர்ச் சுங்கச்சாவடி கே.எம். நாதன் திருமண மாளிகையில், பெரியார் நகர்ப் 'பைந்தமிழ்ப் பாசறை' குமர. தன்னொளியன் - த. கலைவாணி - இணையரின் அருமை மகன் திருநிறை செல்வன். த.நெடுஞ்சோழன், வணி.இ; கல்.இ.க்கும், வே. செயராமன் - செ. இராணி இணையரின் அன்பு மகள் செ. தேன்மொழி க.இ; கல்.இ க்கும் தனித்தமிழறிஞர் பாவலரேறு ஐயா அவர்களின் தலைமையில் தமிழ்த் திருமணம் மிகச் சிறப்பாக நடந்தேறியது. நிகழ்ச்சியின் போது புலவர். குமர. தன்னொளியன், க.மு;கல்.மு. அவர்கள் வரவேற்புரையாற்றினார். புலவர்.அரு. சுந்தரேசனார் முன்னிலையாக இருந்தார். ஆசிரியர் மு. கதிரேசன் அறிமுகவுரையாற்றினார். திருவாளர்கள் கு. முரளி, கி. அமலதாசு, மா. செ. தமிழ்மணி, சி. அருணாசலம், சி. பரஞ்சோதி, குமார்,(ம.க.இ.க) ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள் வே.செயராமன் அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்ச்சி இனிதே நிறைவு பெற்றது.

தமிழினப் பண்பாட்டு மீட்சி மாநாடு!

திபி. 2025 கன்னி 27 (13/10/94) உடுமலை மீனாட்சி திருமண மண்டபத்தில் தன்மானம் இலக்கிய இயக்கச் சார்பில் தமிழினப் பண்பாட்டு மீட்சி மாநாட்டு நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்குத் திரு. வ.நா. தன்மானன், தலைமை தாங்க, திரு இரா. மகிழ்நன் வரவேற்புரையாற்றினார். உலகத் தமிழின முன்னேற்றக் கழக நிறுவனர் பாவலரேறு ஐயா அவர்கள், 'மதங்களின் தாக்கமும் தமிழினப் பண்பாட்டு வீழ்ச்சியும்' எனும் தலைப்பில் நீண்டதோர் உரையாற்றினார். மற்றும் திருவாளர்கள் கு. விடுதலைமணி - ஒடுக்கப்பட்டோரின் உணர்வெழுச்சிபற்றியும், வழக்கறிஞர் உண்மையரசு - அரசியலில் தமிழினத் தலைமை பற்றியும், கா. கருமலையப்பன் தமிழனின் தன்மானம் பற்றியும், இரா. சேது - மாணவர்களின் எழுச்சியும் மக்களமைப்பு மாற்றங்களும் பற்றயும் இரா. அன்பு ஆரியமடமான அலுவலங்கள் பற்றியும் உரையாற்றினார்கள். கு. விடுதலைமணி அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்ச்சி முடிவு பெற்றது.

தமிழ்க்கடல் அலைஓசை பரவும் தமிழ் மாட்சி - நூல் வெளியீட்டு விழா!

கடந்த 27/10/94 அன்று சென்னை அண்ணா அறிவாலயம் கலைஞர் திருமண மண்டபத்தில் பேராசிரியர். அன்பழகனார்

அவர்களின் 'தமிழ்க்கடல் அலைஓசை பரவும் தமிழ் மாட்சி' நூல் வெளியீட்டு விழா நிகழ்ச்சி நடைபெற்றது. விழாவுக்குத் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையேற்று நூலினை வெளியிட்டார். பேராசிரியர் அவர்கள் ஏற்புரை நிகழ்த்தினார். திரு. பொய்யாமொழி அவர்கள் வரவேற்புரையாற்றினார். திருவாளர்கள் ஆர்க்காடு நா. வீராசாமி (வீரச்செல்வனார்) அவர்களும், நாஞ்சில் கி. மனோகரன் (நெஞ்சிற்கினியனார்) அவர்களும், முன்னிலையாக இருந்தார்கள். திரு. பி.டி.ஆர். பழனிவேல்ராசன் அவர்கள் நூலினைப் பெற்றுக் கொண்டார். நிகழ்ச்சியின் போது தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ் நிலம் ஆசிரியரான நம் பாவலரேறு ஐயா அவர்கள் பாராட்டுரை வழங்கினார். மற்றும் திருவாளர்கள் புலவர் அருச்சுனன், பேரா. அமீது, முனைவர் மா. நன்னன் ஆகியோரும் பாராட்டுரை வழங்கினார்கள். பேரா. க. பாலகிருட்டிணன் அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்ச்சி இனிதே நிறைவுபெற்றது.

ஏ. செல்வமணி - அ. மகேசுவரி (எ) திருச்செல்வி வாழ்க!

தி.பி. 2025 - 11.11.94 வெள்ளி அன்று சென்னை ஐசுவரியா திருமண மண்டபத்தில் திருநிறைசெல்வன் ஏ. செல்வமணிக்கும், செல்வி. அ. மகேசுவரி (எ) திருச்செல்விக்கும் உலகத் தமிழின முன்னேற்றக் கழக நிறுவனர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஐயா அவர்களின் தலைமையில் திருமண நிகழ்வு சிறப்புற நடைபெற்றது. தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலுடன் நிகழ்ச்சி தொடங்கப் பெற்று திரு. அ.ச. மூர்த்தி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். திருவாளர்கள், சிவபெருமான், தமிழோசை, இறை. பொற்கொடி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். திரு. செல்வமணி நன்றியுரையுடன் நிகழ்ச்சி இனிதே நிறைவேறியது.

'தமிழில்லாத் தமிழ்நாட்டில் உலகத் தமிழ் மாநாடு?' - கருத்தரங்கம்!

பொன்னேரியில் கடந்த 20/12/95 அன்று ஆதித்தனார் அரங்கத்தில் பொன்னேரி மாணவர் தமிழ்ப் பேரவைச் சார்பாகத் 'தமிழில்லாத் தமிழ்நாட்டில் உலகத் தமிழ் மாநாடு?' கருத்தரங்க நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு உ.நா. கல்லூரித் தமிழ்ப் பேரவைச் செயலாளர் டி.முரளி அவர்கள் தலைமை தாங்க, திரு. ஏ. செல்வராசன் அவர்கள் வரவேற்புரையாற்றினார். தமிழறிஞர் பாவலரேறு ஐயா அவர்கள் சிறப்புரையாற்றினார். திரு. செ. எழிலரசன் அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்ச்சி நிறைவு பெற்றது.

தென்மொழி அச்சகம், சென்னை - 600 005. (தொலைபேசி : 854 7829)